Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –14

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–01 | 15–06–2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை –118

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சி-9598) 077-6059672





# "போரிடும் வல்லமை சேர்ப்போம்" வெளியீட்டு விழாவில்

# தேசியத் தலைவர் கலந்துகொண்டு சிறப்பிப்பு!

## முதல் இறுவெட்டைப் பெற்றுக்கொண்டார்

(கிளிநொச்சி)

**"போரிடும் வல்லமை சேர்ப்போம்" இறுவெட்டு வெளியீட்டு விழாவில் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவினால் உருவாக்கப்பட்ட இவ்இறுவெட்டை வைத்தியக லாநிதி அஜந்தன் அவர்கள் வெளியிட்டுவைக்க தமிழீழத் தேசியத்தலைவர் அவர்கள் அதனைப் பெற்றுக்கொண்டார்.**

விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவின் உருவாக்கத்தில் புலிகளின் குரல் சிட்டு கலையகத்தின் வெளியீடாக 'போரிடும் வல்லமை சேர்ப்போம்'எனும் இறுவெட்டு நேற்று கிளிநொச்சியில் வெளியிடப் பட்டது. இதற்கான இசையுருவாக்கத்தை இளைய இசையமைப்பாளரும் போராளியுமான செயல் வீரன் அவர்கள் ஆக்கியுள்ளளார். நிதர்சனப்போராளி வீரா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக, முதன்மைச் சுடரை தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் ஏற்றிவைத்ததோடு, இதுவரை காலமும் வீரச்சாவடைந்த மருத்துவப்பிரிவுப் போராளிகளை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச அ.சா.நிறுவனங்களுடன் தமிழ்ச்செல்வன் இன்று சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களையும் ஐ.நா.முகவர் அமைப்புக்களையும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் இன்று சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

இன்று காலை 10.30 மணிக்கு விடுதலைப்புலிகளின் திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் வடக்கு கிழக்கில் பணியாற்றும் அனைத்து சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும், ஐ.நா முகவர் அமைப்புக்களும் கலந்து கொள்ளவுள்ளன, இதில் வடக்கு கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை என்பனபற்றி கலந்துரை யாடவுள்ளதாக தெரியவருகிறது. (ச)

## கிளி.க்குமின்பிறப்பாக்கி எடுத்துவர இராணுவத்தினர் அனுமதி மறுப்பு

(அலுவலக செய்தியாளர்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் கார்ப் திட்டத்தின் கீழ் கிளிநொச்சிக்கான மின்சாரம் வழங்கும் நடவடிக்கையை இலங்கை மின்சாரசபை மேற்கொண்டு வந்தது. ஆனாலும் மின்சாரசபையின் மேற்படி நடவடிக்கை சிறிலங்கா இராணுவத்தால் தடைப் பட்டுள்ளது. நீண்ட காலமாக மின்சாரவசதி மறுக்கப்பட்ட மக்களாக வாழ்ந்து வந்த கிளிநொச்சி மக்களுக்கு மின்சாரம் வழங்கும் வகையில் அதற்கான ஜெனரேட்டரை யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்கு எடுத்துவருவதற்கு கடந்த 30ஆம் திகதி மின்சாரசபை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றில் ஆற்றவேண்டிய உரையை சனாதிபதி தொலைக்காட்சியில் ஆற்றியுள்ளார்

### அரசியல் யாப்பிற்கு முரண் என்கிறது ஐ.தே.க

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றத்தில் ஆற்ற வேண்டிய கொள்கை விளக்கவுரையைத் தொலைக்காட்சியில் ஆற்றியுள்ளார். அது அரசியல் யாப்பிற்கு முரணானது என ஐ.தே.கட்சி குற்றம் சாட்டியுள்ளது சனாதிபதி கடந்த சனிக்கிழமை ஆற்றிய இவ் உரையில் அரசாங்கத்தின் கொள்கை விளக்கங்களை வெளிப்படுத்தியமையால் அது அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையாகவே கருத வேண்டி உள்ளது. இது அரசியல் அமைப்பின்படி நாடாளுமன்றத்தில் ஆற்றப்பட வேண்டிய உரையாகும் இந்த உரையில் ஏதும் ஏற்றுக் கொள்ளமுடியாத அம்சங்கள் இருக்குமாயின் அதற்கு எதிராக எதிர்க்கட்சி வாக்களித்தால் அரசாங்கத்தின் அமைச்சரவை பதவிவிலக வேண்டியநிலை ஏற்படும். இவ்வாறன நிலைகள் இருக்கின்ற நேரத்தில் சனாதிபதி இதனை எல்லாம் மதிக்காது நாடாளுமன்றத்தில் அவமதிக்கும் வகையில் கொள்கை விளக்கஉரையை தொலைக காட்சி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலை ஊழியர் தொடர் வேலை நிறுத்தம்

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் நேற்று முதல் தொடர்வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பல்கலைக்கழகத்தின் நிர்வாக செயற்பாடுகள் அனைத்தும் முடங்கிப்போயின எனினும் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்காதவகையில் குடிநீர் சேவை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் சுமூகமாக இடம்பெறுகின்றன. அத்துடன் பல்கலைக்கழக பாதுகாப்பு சேவையினரும் தொடர்ந்தும் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

☐ போதனைசாரா ஊழியரின் பணிகளைத் தனியார் மயப்படுத்தலை எதிர்த்தல்

☐ பல்கலைக்கழக பதிவாளரின் வெளிநாட்டுப்பயணத்தில் இடம்பெற்ற மோசடிக்கு நடவடிக்கை எடுக்காமை

☐துணைவேந்தரின் விடுதிகாப்பாளர் (14 ஆம் பக்கம் பார்க்க)

### –உயிலங்குளம் சோதனைச்சாவடியில்–

## பெண்போராளிகளின் உடைமைகளை சோதனையிட முயன்றதால் உருவான பதற்றம்

(மன்னார்)

மன்னாரில் நேற்று சிறிலங்காப் படையினர் பெண் போராளிகள் இருவரின் பிரயாணப்பைகளைச் சோதனையிட முயன்றதையடுத்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, நேற்றுமாலை 3.00 மணியளவில் மன்னார் மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலவரசி, கலைமணி ஆகியோர் வன்னியிலிருந்து உயிலங்குளம் ஊடாக மன்னார் சென்றுகொண்டிருந்தனர் அப்போது மன்னார் பெற்றோல் நிலையத்திற்கு முன்னால் தமது பிரயாணப்பைகளை முச்சக்கர வண்டியில் ஏற்றிக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்குநின்ற இராணுவம் அவர்களின் பிரயாணப்பைகளை சோதனை செய்ய வேண்டுமெனக் கேட்டனர். இதற்கு இப்பெண் போராளிகள் தாம் வழமை போலவே மன்னாருக்குச் செல்வதால் பரிசோதனை செய்ய வேண்டாமெனக் கூறினர். அதனை கேட்காது இராணுவத்தினர் பைகளைச் சோதனையிட முயன்றனர். இதனை பார்த்துக் கொண்டிருந்த மக்கள் ஒன்று கூடி இராணுவத்தை எதிர்த்தனர். இதனால் ஏற்பட்ட அசம்பாவிதத்தால் சிலர் காயமடைந்தனர்.உடனடியாக

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**இறபர் முத்திரை**

கிளிநொச்சியில் பொலிமர் இறபர்ஸ்டாம்உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக்கொப்பி, லேமனட்டிங் போன்றவைகளையும் உடனுக்குடன் செய்து கொள்ள பிள்ளையார் பொத்தக சாலை, கண்டிவீதி, கிளிநொச்சி.
TP. 0212285750 (சி.9823)

**குயிலன் புத்தகசாலை ஆனந்தபுரம் கிளிநொச்சி.**

எமக்குரிய பிரயாணப்பை முக்கிய ஆவணங்களுடன் எமது கடைக்கும் 155ஆம் கட்டைக்குமிடையில் இரவு 7 மணிக்குத்தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எமது கடையில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம். (சி-4706)


# கிளி.நகருக்கு மின்வழங்கல் நேற்று ஆரம்பமாகியது

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரப்பகுதியினை அண்மித்த பகுதிகளுக்கு நேற்று முதல் மின்சாரம் வழங்கும் நடவடிக்கையினை இலங்கை மின்சார சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் 4.30 மணிக்கு மின்சாரசபை உயர் அதிகாரிகள் முன்னிலையில் கிளிநொச்சியில் மின்சாரம் வழங்கும் வகையில் மின்பிறப்பாக்கி இயங்க வைக்கப்பெற்றது.



தினமும் பகல் 8.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரையும், பிற்பகல் 6.00 மணிமுதல் இரவு 10.30 மணிவரையும் கிளி. நகரை அண்டிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுமென மின்சாரசபை அதிகாரி தெரிவித்துள்ளார். (சோ)

# அரச ஊழியர் அலுவலக நடைமுறைகளுடன் நிற்காது பாதிப்புற்ற மக்களுக்குச் சேவை புரிய வேண்டும்

## கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

அலுவலக நடைமுறைகள் சட்டதிட்டங்களுக்குள் மட்டுமே மட்டுப்பட்டு நின்று விடாமல் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள எமது மக்களுக்கு சமூகப் பொறுப்புணர்வுடனும் சேவைபுரிய வேண்டிய கடப்பாடு, அரச அதிகாரிகளுக்கு உள்ளது. இதனை உணர்ந்து செயற்படும் போது மட்டுமே அரச பணி என்பது மக்கள் சேவையாக அமையும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் கிளிநொச்சி அழகியல் கலாமன்ற அபிவிருத்திக்கான 'விசேட கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அழகியல் கலாமன்றத்தின் அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பான இக்கூட்டத்தில் கிளிநொச்சி அரசாங்க அதிபர், கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர், ப.அரியரத்தினம், தமிழீழக்கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டம் அழகியல் கலாமன்ற கேட்போர் கூடத்தில், அழகியல் கலாமன்றத் தலைவர் அ.அன்ரன் அன்பழகன் தலைமையில் கடந்த வியாழனன்று நடைபெற்றது.

தற்போது அழகியல் கலாமன்றத்தில் யுனிசெவ் நிறுவன உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் சிறுவர் வள நிலையத்துடன் இளையோருக்கான நுண்கலை வகுப்புக்களை நடத்துவதற்குரிய மண்டப வசதிகளை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இன்றைய இளைஞர்களின் மனஎழுச்சி வன்முறை சார்ந்ததாக மாறிவிடாது இதனை ஆற்றுப்படுத்தி சமநிலையுடையதாக மாற்றுவதில் நுண்கலைகளின் இரசிப்பும், நுண்கலைப்பயிற்சியும் மிகப்பிரதானமான பங்களிப்பை கொண்டிருக்கிறது. எனவே சிறுவர்கள் இளைஞர்களுக்கான நுண்கலை வகுப்புக்கள் ஒழுங்காக நடைபெறுவது அவசியமாகிறது என கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்தார். இதுதொடர்பான மேலதிகநடவடிக்கைகள்,நுண்கலை ஆசிரியர்களை இணைத்து நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.(லோ)

# சுகாதார ஊழியர் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முல்லையில் மந்த கதியிலேயே உள்ளது

**சு.சே.ப. ஜெயகுலராசா**

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுகாதார ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வது கடந்த பலவருடங்களாக மிகக்குறைவாகவே காணப்படுவதாக முல்லை. மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வி.ஜெயகுலராஜா தெரிவித்துள்ளார்.

இதேவேளை முல்லை. மாவட்டத்தில் கடந்த எட்டு முதல் 10 வருடங்களாகத் தொண்டர்களாக கடமையாற்றியோரில் வருட அடிப்படையில் 16 பேர் சுத்திகரிப்புப் பணியாளர்களாகவும், 07 பேர் சாதாரண பணியாளர்களாகவும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்த அவர் ஏனையோர் விடயத்தில் மாகாண சுகாதார அமைச்சு முடிவெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.இதேவேளை வருட அடிப்படையில் நியமனங்கள் வழங்குவதால் முல்லை. மாவட்டத்தில் மிகவும் குறைவாகவே ஆட்சேர்ப்பு காணப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.


# விசேட அறிவித்தல்

**மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவில் பணியாற்றுபவர்களுக்கான விசேட சந்திப்புக்கள் 15.06.2004(செவ்வாய்க்கிழமை) பின்வரும் நேரங்களில் கிளிநொச்சி வெண்புறா நிறுவ்னத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

| இல | நேரம் | கலந்துகொள்ள வேண்டியவர்கள் |
|---|---|---|
| 01 | 10.00மு.ப | சகல சாரதிகளும் ம.க.அ.பிரிவு |
| 02 | 02.00பி.ப | பிரிவுத்தலைவர்கள், அணித்தலைவர்கள். ம.க.அ. பிரிவு (Section leader) (Team leader) |
| 03 | 3.30 பி.ப | சகல பணியாளர்களும் ம.க.அ.பிரிவு |

(சி.9844)



# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் வீரச்சாவு



19 02
10 05
1977 2004

**லெப். இலக்கியன்**

அகஸ்ரின் வசந்தரூபன்

முல்லைக் கடற்பரப்பில் நீரில் மூழ்கி வீரச்சாவடைந் தார்

வட்டக்கச்சி மண்ணில் பிறப்பெடுத்து- முல்லைக்
கடலில் காவியமாகிய இலக்கியா -உன்
இறுதி மூச்சு நீரோடு நீராகி தமிழீழத்திற்காக
சென்றாலும் உன் நினைவு எம்மைவிட்டு அகலாது.

213 சிவசுந்தரம் வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

(4705)

நண்பர்கள்
லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம்,
வட்டக்கச்சி.



# ஆண்டொன்றில் கனவாய் போன நினைவலைகள்



சர்வதேசக் கடற்பரப்பில் வணிகக்கப்பலினை கடற்படையினர் தாக்கி அழித்தபோது

நிஜமான உருவாக... 14.02.1980

திதி 02.06.2004

நிழலான கனவாக... 14.06.2003

**கடற்புலி மேஜர் நிர்மலன்**

**ரணராஜா ரகுநாத்**

விடியலைத் தேடிய வேங்கை இவன்
கடல் மீது களங்கண்ட மறவன் இவன்
படகோட்டும் திறன் கொண்ட சூரன் இவன்
சண்டைப் படகுதன் கட்டளை அதிகாரி இவன்

சாள்ஸ் அணிதனிற் பணி செய்து நின்றான்
சர்வதேசம் தன் பணிக்காய் அலை தவழ்ந்தான்
தாவிடும் புலிகளின் வணிகக் கப்பல் தனில்
கப்பல் கப்டனாய் கடமை செய் வேளை
கயவர் தாம் அழித்தனரோ?

ஆண்டொன்று கடந்தென்ன-பல
ஆண்டுகள் தான் கழிந்தென்ன..?
இன்று வரை வாழ்கின்றோம்
உங்கள் ஜீவன் எம்மோடு...!

தினம் தோறும் விடியலிற்காய்
நகருகின்ற பொழுதெல்லாம்
தினம் தினம் உங்களை நாம்
தொழுகின்றோம் கண்ணீரால்...!

மறைந்திடுமோ எம் காயம்...?
கரைந்திடுமோ எம் சோகம்...?

ஆறாகும் கண்ணீரில்-
கரைகிறது எம் காலம்...!

எப்போதும் எங்கள் மூச்சில்
உணர்கின்றோம் உங்கள் சுவாசம்.!
இனியும் வரும் கால மெல்லாம்
கரைவோம் உங்கள் நினைவுகளில்.....!

சி.97(9)

14.06.2003 அன்று எம் செல்வத்துடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய 11 மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

நி.மு:-நெடியகாடு,வல்வெட்டித்துறை,யாழ்.
த.மு:-இல-40,றெட்பானா சந்தி, விசுவமடு

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
அன்பு அம்மா, ஆசை அக்கா, அத்தான்,மருமகள்,
பாசமுள்ள தங்கை,போராளி நண்பர்கள்

யாழ்ப்பாணம்

# 24 மணி நேரத்திற்குள் ஈராக்கில் 2ஆவது தற்கொலைத் தாக்குதல்

## 12 பேர் பலி 50இற்கு மேற்பட்டோர் காயம்

(பாக்தாத்)


**ஈராக்கில் நேற்று இடம் பெற்ற த ற்கொலைதாரியின் கார்க்குண்டு வெடிப்புத் தாக்குதலில் வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்கள் ஐவர் உள்ளிட்ட12பேர் கொல்லப்பட்டுள்ளனர். 50இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.**

உயிரிழந்த ஐந்து ஒப்பந்தக்காரரும் இங்கிலாந்து, அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஐந்து பேரும் அமெரிக்க நிறுவனமான ஜெனரல் எலக்ரிக்கல் கம்பனியின் கீழ் பணி புரிந்து வந்தனர்.

அமெரிக்க இராணுவ வாகனத்தை வேகமாகப் பின்தொடர்ந்து இக்கார்க்குண்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளது. கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் அமைந்திருந்த அமெரிக்க இராணுவப் பாதுகாப்பு மையத்தில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஈராக்கில் சிரேஷ்ட இராஜதந்திரி ஒருவர் கொல்லப்பட்ட சில மணி நேரத்தில் இந்தத் தாக்குதல் இடம் பெற்றது. 24 மணிநேரத்திற்குள் இடம் பெற்ற இரண்டாவது தற்கொலைதாரியின் கார்க்குண்டு வெடிப்பு இதுவாகும்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற தற்கொலைத்தாக்குதலில் நான்கு ஈராக்கியப் பொலிசார் உள்ளிட்ட 12 பேர் கொல்லப்பட்டிருந்தது தெரிந்ததே. அண்மைக்காலமாக ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் மீதும், ஈராக்கின் இடைக்கால நிர்வாகத்தினர் மீதும் தீவிரவாதிகளால் நடத்தப்பட்டுவரும் தாக்குதல்கள் அதிகரித்து வருகிறன.



பாக்தாத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற கார்க்குண்டு வெடிப்பில்சேதமுற்ற கட்டடத்தையும் எரியும் வாகனத்தையும் அவதானிக்கும் ஈராக்கியர் ஒருவர்.

### டீ.டீ.ரிக்குத்தடை

(லண்டன்)

டீ.டீ.ரி பாவனையை ஐக்கிய நாடுகள் சபை உலகளாவிய ரீதியில் தடைவிதித்துள்ளது.

2001ஆம் ஆண்டில் ஸ்ரொக்கொம் உடன்படிக்கையில் இத்தடை விதிக்கப்பட்டபோதும் சில ஆபிரிக்க நாடுகளுக்கு விதிவலக்களிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் வஸிரிஸ்தான் நகருக்கண்மையில் பாகிஸ்தான் இராணுவத்தினர் தமது காவல் அரண்ஒன்றைப் பலப்படுத்துவதையும், ரொக்கற்லோஞ்சர் ஒன்றை எதிரி மீது குறிவைத்துள்ள இராணுவ வீரரையும் காணலாம்.





# உலகப் பொருளாதார அமைப்பின் செயற்பாட்டைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

### -ஆர்ப்பாட்டக்காரர்- பொலிசார் சியோலில் மோதல்

(சியோல்)

உலக பொருளாதார அமைப்பு தனியார் மயமாக்கலை ஊக்குவிப்பதாகக் கூறி ஆயிரக்கணக்கானோா தென் கொரியத் தலைநகர் சியோலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் சியோலில் நேற்று முன்தினம் நடைபெற்ற உலகபொருளாதார அமைப்பின் இந்த மாநாட்டில் ஆசியாவைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் என பலதரப்பட்டவர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை அங்குள்ள வெளிநாட்டவர்களும் உலக பொருளாதார அமைப்பிற்கு எதிரான இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத் தைக்கலைக்க முற்பட்ட பத்தாயிரம் பொலிசாரிற்கும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் ஏற்பட்ட மோதலின் போது பலர் படுகாய மடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் சனாதிபதி புஷ் நூலகக்கல்லூரி மைதானத்தில் இராணுவ வீரர் கோல்டன் நைட்டுடன் பரசூட்டில் வந்திறங்கும் காட்சி.

# கொங்கோவில் மற்றுமொரு சதிமுயற்சி சனாதிபதி கபேலா அரசால் முறியடிப்பு

### -சனாதிபதியின் மெய்க்காப்பாளர் தலைமறைவு

(லண்டன்)

கொங்கோவில் சதிமுயற்சி ஒன்றினுள் ஈடுபட்டு வந்த குழுவிற்கு தலைமை வகித்த கொங்கோ சனாதிபதி கபேலாவின் மெய்க்காப்பாளர் அந்நாட்டின் காட்டுப்பகுதிக்குள் தப்பியோடிச் சென்றுள்ளார் என்று சனாதிபதி கபேலாவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட அந்த நபர் அரசாங்க வானொலியை தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்த பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை தலை நகரில் இருந்து தப்பியோடி விட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று மாதகாலத்திற்குள் கொங்கோவின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது சதி முயற்சி இதுவென தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை தலைநகரில் துப்பாக்கி வேட்டுச்சத்தங்களும் பீரங்கிக் குண்டுத் தாக்குதல் சத்தங்களும் கேட்தாகவும், நேற்று முன்தினம் நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளதாகவும்அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சவுதியில் கடத்தப்பட்ட அமெ.பிரஜையை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

### அமெ. இராஜாங்க அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(நியூயோர்க்)

சவுதி அரேபியாவில் கடத்தப்பட்ட அமெரிக்கப் பிரஜையை மீட்பதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென அமெரிக்காவின் இராஜாங்க அமைச்சின் செயலாளர் கொலின்பவல் தெரிவித்துள்ளார். இதுவிடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; சவுதி அரேபியா பொலிசாருடன் இது தொடர்பாக இணைந்து செயற்படப் போவதாகவும் அவர் தெரிவித்துள் ளார்.

ஈராக்கிலுள்ள சிறைகளிலும் கியூபாவிலும் உள்ள முஸ்லிம்கள் அமெரிக்கர்களால் சித்திரவதை செய்யப்படுவதை எதிர்த்தும் தாங்கள் இந்தச் செயலில் ஈடுபட்டதாக அல்-ஹைதா தீவிரவாதிகள் கூறியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை சவுதியில் பொறியியலாளராக பணியாற்றி வரும் போல்ஜோண்சன் அல்-ஹைதா தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டமையும் கடந்தவாரம் அமெரிக்கர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டமையும் தெரிந்ததே.

# போர்த்துக்கல்லில் கைதான 7 அரேபியரை நாடு கடத்த நீதிமன்று உத்தரவு

(லண்டன்)

ஒல்லாந்து உணவுப் பிரிவு கொடுத்த தகவலையடுத்து போர்த்துக்கல்லில் ஏழு அரேபியர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். இந்த ஏழுபேரையும் நாடு கடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.கைது செய்யப்பட்ட ஏழு பேர்களில் ஆறுபேர் மொறோக்கோ நாட்டைச் சேர்ந்தவர் என்றும் ஒருவர் கியூனியாவை[illegible]ந்தவரென்றும் தெ[illegible]விக்கப்ப[illegible]றது.

# பிரதான வீதிகளுக்கு கிரவல் இடப்படுவதால் நாளாந்த செயற்பாடுகள் பெரும் பாதிப்பு!

## பாடசாலைகளில் கூட நெருக்கடி

(அலுவலக செய்தியாளர்)

**உயிலங்குளத்தில் இருந்து ஆண்டான்குளம் நோக்கிச் செல்லும் நான்கு கிலோமீற்றர் நீளமான பிரதான வீதியில் கிரவல் போடப்பட்டமையால், பெரும் தூசு மண்டலம் எழுவதால் அதன் அருகில் உள்ள பாடசாலைகள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றில் வழமையான செயற்பாட்டை மேற்கொள்ள முடியாதுள்ளது.**

மிகவும் மோசமாகச் சேதமடைந்திருந்த மேற்படி வீதி கிரவல் பரவப்பட்டு இன்று 7 மாதங்களைத் தாண்டிவிட்டது. இந்த நிலையில் இவ்வீதியூடாகப் பெருமளவான ஊர்திகள் பயணிக்கின்றன. அதனால் எழுகின்ற பெரும் தூசிமண்டலத்தால் குறித்த வீதிக்கருகில் உள்ள மன்னார் கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், மன்னார் ஆண்டான் குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை என்பவற்றில் கல்விகற்கின்ற மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். பாடசாலைக்கு அருகால் செல்லும் மேற்படி வீதியில் ஊர்திகள் பயணிக்கின்ற போது எழுகின்ற பெரும் தூசு மண்டலம் பாடசாலைக் கட்டடங்களினுட்புகுந்து விடுவதால் வகுப்பறைகளில் கற்கின்ற மாணவர்களும், கற்பிக்கின்ற ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் மாணவர்கள் சுமுகமாகக் கல்வி கற்க முடியவில்லை. மாணவர்களின் பாடப்புத்தகங்கள் தூசியால் நிறைந்து விடுவதோடு மாணவர்களின் வெள்ளை நிறச் சீருடைகள் கிரவல் தூசிகளால் அழுக்கேறி விடுகின்றன. இந்த நிலை காரணமாக மேற்குறித்த பாடசாலை மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கான கணினிகள் கூடக் கிடைக்காமல் உள்ளது. மேற்படி வீதியில் எழுகின்ற தூசு மண்டலத்தால் மேற்குறித்த இரண்டு பாடசாலைகளிலுமாக மொத்தம் ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைவது மட்டுமல்லாது இதே வீதியில் அமைந்திருக்கின்ற மடுவலயக்கல்வித்திணைக்களம், கமத்தொழில் சேவை நிலையம், மக்கள் வங்கியின் கிளை அலுவலகம், பிரதேச செயலகம், அடம்பன் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நிலையம் போன்ற பல்வேறு அமைப்புக்களும் இயங்கிவருகின்றன இவற்றுக்கும் மேற்குறித்த வீதியால் எழுகின்ற தூசி மண்டலத்தால் பெரும் சிரமம் ஏற்பட்டு வருகிறது. அலுவலகங்களில் அமர்ந்து தமது கடமைகளைச் சீராக மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியிருக்கின்றது. அதுமட்டுமன்றி இப்பகுதியில் உள்ள குடியிருப்பாளர்களும் தூசியால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேற்படி வீதியில் எழுகின்ற தூசியால் ஏற்படும் தாக்கம் தொடர்பாக ஆண்டான்குளம் றோ.க.த.க. பாடசாலை அதிபர் எஸ். விஸ்வராஜா கருங்கண்டல் றோ.க. வித்தியாலய அதிபர் பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில்,இந்த வீதியில் இருந்து எழும் தூசியால் எமது பாடசாலைகளில் ஏற்படுகின்ற விளைவுகள் தொடர்பாகவும் அதனை நிறுத்தாது விடுவதனால் ஏற்படுகின்ற விளைவுகள் பற்றியும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் எடுத்துக் கூறி குறித்த கிரவல் வீதிக்கு தார் பூசிச் செப்பனிட்டு எமது மாணவர்கள் எவ்வித இடையூறும் இன்றி கல்வி கற்பதற்கான வசதியைச் செய்து தருமாறு கடந்த ஐந்து மாதங்களின் முன்னர் நாம் கேட்டுக் கொண்டோம் எனவும் இதுவரை மேற்படி வீதிக்கு தார் இடப்படாத நிலையில் இப்போதும் பெருமதூசுஎழுந்துகொண்டே இருக்கிறது எனவும் தெரிவித்தனர்..(லோ,தீ)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(முல்லைத்தீவு)

யுனிசெப் நிறுவன நிதியுதவியுடன் முல்லை.பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் பாடசாலை செல்லாமல் இருந்த நான்கு கிராம அலுவலர் பிரிவு மாணவர்களுக்கு கடந்த புதன் கிழமை கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

குமுழமுனை மத்தி, குமுழமுனை மேற்கு, குமுழமுனை கிழக்கு, தண்ணிமுறிப்பு ஆகிய கிராமஅலுவலர் பிரிவிலேயே வழங்கப்பட்டது. தண்ணிமுறிப்பில் 125 மாணவர்களுக்கும் குமுழமுனையில் [illegible] கிராம அலுவலர் பிரிவில் 210 மாணவர்களுக்கும் மொத்தம் 335 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.இதில் ஒழுங்கானவரவின்மை இடைவிலகிய மாணவர்கள் பாடசாலை செல்லாதமாணவர்களென இனம் காணப்பட்டே வழங்கப்பட்டது.இதில் யுனிசெப் பிரதிநிதிகள் றிடோ பிரதிநிதிகள், முல்லை. பொருளாதார அபிவிருத்தி நிறுவனப் பிரதிநிதிகள்,பாடசாலை அதிபர்கள், கிராமஅலுவலர்கள், பெற்றோர் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (20)

## சத்திரசிகிச்சை கூடத்திற்கு குளிர்சாதனப் பெட்டி வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை சத்திரசிகிச்சை கூடத்திற்கு இளந்தென்றல் ஓய்வகத்தினால் புதிய குளிர்சாதனப் பெட்டி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாக கிளி.மாவட்ட வைத்தியரும் வைத்திய கலாநிதியுமான மருத்துவர் யூடிறமேஸ் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்தகால யுத்தத்தினால் கிளி.மாவட்ட மருத்துவமனை அழிக்கப்பட்டிருந்தது. பின்னர் ஓயாத அலைகள் நடவடிக்கை மூலம் மீட்கப்பட்டதையடுத்து பெருமளவான மக்கள் இப்பகுதிகளில் குடியமர்ந்தததை அடுத்து கிளி.மருத்துவமனையும் மக்களுக்குப் பணிபுரிய கிளிநொச்சிக்குக் கொண்டு வரப்பட்டது.

கிளிநொச்சிக்கு கொண்டுவரப்பட்ட இம் மருத்துவமனைக்கு யப்பான் அரச நிதியுதவியில் புதிய நோயாளர் விடுதி அமைத்துத் தரப்பட்டது. அதேபோல இந்த மருத்துவ மனையின் பிறதேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு நிறுவனங்களும் வர்த்தக நிலையங்களும் உதவிபுரிந்து வருகின்றன. அந்தவகையில் வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை கூட பயன்பாட்டுக்காக கிளிநொச்சியில் இயங்கிவரும் இளந்தென்றல் ஓய்வகம் குளிர்சாதனப்பெட்டி ஒன்றை கடந்த சனிக்கிழமை அன்பளிப்புச் செய்திருக்கிறது. அதேவேளை கிளி.மாவட்ட மருத்துவசங்க கேட்போர் கூடத்தின் பயன்பாட்டுக்காக பத்துக் கதிரைகளையும் அன்பளிப்புச் செய்துள்ளது.

மாவட்ட வைத்தியசாலையின் தேவையைக் கருத்திற்கொண்டு அதனை நிவர்த்திசெய்யும் வகையில் செயற்படும் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (லோ,ச)

## அடிக்கல் நாட்டல்

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திஉதவி ஆணையாளர் திணைக்களத்திற்கான அடிக்கல் முல்லைத்தீவில் கச்சேரி நிர்வாக அலுவலரினால் கடந்த 9ஆம் திகதி நாட்டப்பட்டது. (20)

## தாண்டிக்குளம் பாடசாலை வளவில் பெருமளவு வெடிபொருட்கள் மீட்பு

(செட்டிகுளம்)

வவுனியா தாண்டிக்குளம் பாடசாலை வளவில் இருந்து பெருமளவான வெடிபொருட்களினை சுவிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனமான எவ்.எஸ்.டி நிறுவனம் அகற்றி வருகின்றது.இராணுவ நடவடிக்கையின் போது கைவிடப்பட்ட வெடிபொருட்கள் இருப்பதாக இனம் காணப்பட்டதை அடுத்துப் பாடசாலையின் செயற்பாடுகள் கடந்த சில நாட்களாக நிறுத்தப்பட்டு கடந்த ஐந்து நாட்களாகச் சுமார் 3000வெடிபொருட்கள், துப்பாக்கிச் சன்னங்கள், எறிகணைகள் என்பன இதுவரை மீட்கப்பட்டிருப்பதாக எவ்.எஸ்.டி நிறுவனம் தெரிவிக்கின்றது. இந்த வெடிபொருட்கள் கிணறுபோன்று பெரிய கிடங்குகளுக்குள் போடப்பட்டுள்ளன. இவை கனரக வாகனங்களின் உதவியுடன் மீட்கப்பட்டு வருகின்றது. இதைவிட இன்னும் வெடிபொருட்கள் இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.மீட்கப்பட்டு வரும் வெடிபொருட்கள் இராணுவத்தினருடையவை என்று நம்பப்படுகிறது. முன்னர் இந்தப் பாடசாலையில் பாரிய இராணுவமுகாம் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.(21)



கிளிநொச்சி மருதநகர் சேர்பொன்இராமநாதன் முன்பள்ளி விளையாட்டுப்போட்டியின் இடைவேளையின்போது வினோத உடை போட்டியில் பங்குபற்றும் சிறார்களையே படத்தில் காண்க.(படம் சசி)

## தாயக சிறுவர் நல மேம்பாட்டிற்காக சிறப்புற நடைபெற்ற கானக்குயில் நிகழ்வு

தாயக சிறுவர் நலமேம்பாட்டு நிதிக்காக தமிழர் புனர் வாழ்வுக் கழகம் சுவிஸ் கிளை ஐரோப்பா ரீதியில் நடத்திய கானக்குயில் - 2004 சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி கடந்த 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுவிஸ் சூரிச் நகர அல்பிஸ் குயற்லி மண்டபத்தில் நடை பெற்றது. சுவிசின் முன்னணி வர்த்தக நிறுவனங்களின் பேராதரவுடன் மாலை 2.30இற்கு மங்கள விளக்கேற்றலுடன் இந் நிகழ்வு ஆரம்பமாகியது. கானக்குயில் - 2004 நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் றெஜி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். உருக்கமான இவரதுஉரையில்தாயகததின் தற்போதைய தேவைகள், மறுவாழ்வுத் திட்டங் கள் குறித்தும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் பங்களிப்பின் அவசியத்தையும் அவர்களுக்கு நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்தார். கானக்குயில் - 2004 நிகழ்வில் கௌரவ விருந்தினராக தமிழ்நாடு விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன் கலந்து சிறப்பித்தார். இவர் ஆற்றிய உரையில் விடுதலைப் போரின் எழுச்சி, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தாயகத்தில் ஆற்றுகின்ற பணிகள் என்பதைக் குறிப்பிட்டதோடு, உலகத் தமிழினத்திற்கு கிடைத்த ஒப்பற்ற தலைவர் தமிழீழத் தேசியத் தலைவர் என்பதையும் தமிழினவிடுதலைக்காக தமிழ்நாடு விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு என்றென்றும் கைகொடுக்கும் என்ற செய்தியையும் அரங்கம் நிறைந்த தமிழ் மக்களுக்குத் தெரிவித்தார். கானக்குயில் - 2004 நிகழ்வில் சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, டென்மார்க், இத்தாலி, நோர்வே



ஆகிய நாடுகளிலிருந்து போட்டியாளர்கள் பங்குபற்றினர். கானக்குயில் - 2004 ஆக தர்மலிங்கம் முகுந்தனும் இளம் கானக்குயில் 2004 ஆக நிலா மாணிக்கவாசகரும் மழலை கானக்குயில் - 2004 ஆக சங்கவி விஜயரட்ணமும் தெரிவாகியிருந்தனர். இளம் கானக்குயில் - நிலா மாணிக்கவாசகர் மழலை கானக்குயில் சங்கவி விஜயரட்ணம் ஆகியோர் தமக்கு வழங்கப்பட்ட பரிசில் களை தமிழர் புனர்வாழ்வுக் கழகப்பணிக்காக வழங்கியிருந்தமை வரவேற்கத்தக்க நிகழ்வாக அமைந்திருந்தது. ராதா நடனாலய மாணவிகள் வழங்கிய எழுச்சி நடனமும், மண்வாசனைக் கலைஞர்களான முகத்தார் வீடு எஸ்.ஜேசுரட்ணம் குழுவினர் வழங்கிய நகைச்சுவை நிகழ்வும் நடைபெற்றன. தமிழீழ விடுதலைப் பாடல்கள் மட்டுமே பாடப்படும் இந்நிகழ்வை ஐ.பி.சி தமிழ் வானொலி நேரடி ஒலிபரப்பு செய்திருந்தமையும் ரி. ரி. என். தமிழ்த் தொலைக்காட்சி இணையம்பதிவு செய்தமையும் குறிப்பிடத்தக்கவை.

பொதுசன
யாழ்ப்பா

# வல்வெட்டித்துறையிலிருந்து படையினரை வெளியேற்றி நகரைக்கட்டி எழுப்ப நடவடிக்கை எடுக்குக!

## பொது அமைப்புக்கள் சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**வல்வெட்டித்துறை நகரை அண்டிய பகுதிகளிலிருந்து படையினரை வெளியேற்றி அந்நகரை மீளக்கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதியைச் சேர்ந்த மீனவசங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.**

யுத்தத்தினால் வல்வெட்டித்துறை நகரப்பகுதி பெரும் சேதங்களிற்கு உள்ளான நிலையில், 1996ஆம் ஆண்டு, யாழ். குடாநாடு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டது முதல் வல்வெட்டித்துறை நகரின் கரையோரப்பகுதி படையினரால் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டு முகாமாக்கப்பட்டுள் ளது.

அத்துடன் பொலிஸ் நிலையத்திற்கெனவும்தனியாரது வர்த்தக நிறுவனங்களைப் பொலிசார் ஆக்கிரமித்துள்ளனர். இவற்றை விடுவித்து, நகரை மீளக்கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்குமாறு அவ்வமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

# காரைநகர்–ஊர்காவற்றுறை பாதையில் தரமற்ற இயந்திரப் படகு சேவையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.காரைநகர் ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்களுக்கிடையே நடத்தப்பட்டுவரும் பயணிகள் படகுச்சேவையில் ஈடுபடுத்தப்படும் படகுகள் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறுப்பில் இடம்பெற்று வரும் மேற்படி படகுச்சேவையில் ஈடுபடுத்தப்படும் படகுகளின் தளங்கள் உக்கிச் சேதமடைந்த நிலையில் காணப்படுவதுடன் பயணிகளுடன் புறப்படும் போது இயந்திரக்கோளாறுகள் காரணமாக படகு நடுக்கடலிலேயே நின்று விடுகிறது.

இதனால் இப்படகுச் சேவையில் பயணிப்போர் பெரும் பீதியுடனேயே பயணிக்கின்றனர்.

எனவே மேற்படி பயணிகள் படகுச்சேவையில் காணப்படும் அபாயங்களையும் இதனால் பயணிகள் எதிர்கொள்ளும் இன்னல்களையும் போக்கும் விதமாக மேற்படி சேவையில் புதிய படகுகளை ஈடுபடுத்தும்படி யாழ்மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியத்தினர் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

# உறுதியளிக்கப்பட்ட நிதி முழுமையாக வழங்கவில்லை யாழ்.மாவட்டத்தில் திட்டங்கள் அரைகுறையில்

## நியாப் திட்டக்கூட்டத்தில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நியாப் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படவுள்ள கிராமங்களைத் தெரிவு செய்வதற்கான முக்கிய கூட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை யாழ். அரசசெயலகத்தில் இடம் பெற்றுள்ளது.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவசுவாமி தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் தமிழீழ அபிவிருத்தித்திட்டப் பணிப்பாளர் தூயவன், யாழ்.மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், யாழ்.மாவட்ட நியாப் திட்டப்பணிப்பாளர் பால கிருஸ்ணன் ஆகியோர் உட்பட யாழ்.மாவட்டத்தின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இதில் கருத்துத் தெரிவித்த தமிழீழ அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் தூயவன்:-

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கென உதவும் நிதி நிறுவனங்களால் உறுதியளிக்கப்பட்ட நிதி முழுமையாக வழங்கப்படாமையாலும்.

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து சரியான திட்டமிடல்களையும், ஆய்வுகளையும் மேற்கொள்ளாது செய்யப்படும் அபிவிருத்தி நடவடிக்கை முயற்சிகளாலும் மக்கள் முழுமையான பயனைப்பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதுடன்

பலஅபிவிருத்தி நடவடிக்கைகள் அவற்றின் இலக்கை முழுமையாக எட்டாது அரைகுறையாகக் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (33)

# பொம்மைவெளி காக்கை தீவில் குடிநீர்ப் பஞ்சம் மக்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரின் புறநகர்ப் பகுதியான பொம்மை வெளி மற்றும் காக்கைதீவு கிராமங்களில் மோசமான குடிநீர்ப்பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையினால் பௌசர் குடிநீர்த் தாங்கிகள் மூலமே இப்பகுதி மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. எனினும் இது தமது பாவனையின் ஒரு பகுதிக்கு மட்டுமே போதுமானதாக உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அங்கு குடிநீர் நிரப்ப சிறிய பிளாஸ்டிக் கொள்கலனையே மாநகர சபையினர் பயன்படுத்துவதாகவும், பெரிய கொள்கலன்களை மாற்றி கூடிய அளவு குடிநீரை வழங்கநடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கூட்டம்

யாழ்.மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தின் கோப்பாய்ப் பிரதேச வாழ் ஓய்வூதியர்களுக்கான முக்கிய கூட்டம் ஒன்று எதிர்வரும் 26ஆம் திகதி மாலை 3.30 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பிரதேச வாழ் ஓய்வூதியர்களுக்குள்ள ஓய்வூதிய முரண்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ள இக்கூட்டத்திற்கு கோப்பாய் பிரதேச ஓய்வூதியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (33)

# சுயதொழில் முயற்சிக்கு "நியாப்" வட்டியில்லாக்கடன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மக்களின் சுயதொழில்முயற்சிகளை மேம்படுத்துவதற்காக வட்டியில்லாக்கடன்கள் நியாப் திட்டத்தினூடாக வழங்கப்படவுள்ளன. கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் பாதிக்கப்பட்டு பொருளாதார நிலைமையில் பின்தங்கிப்போயுள்ள மக்களின் சுயதொழில் முன்னேற்றத்தைக் கவனத்தில் கொண்டே நியாப்திட்டத்தினூடாக இக்கடனுதவிகள் வழங்கப்படவுள்ளன.

இக்கடனுதவியின் ஒரு அங்கமாக யாழ்.நவாலிப்பகுதியில் வாழ்ந்து வரும் மக்களுக்கு வட்டியில்லா சுயதொழிற் கடனாக 20ஆயிரம்ரூபா வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் யாழ்.மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்ந்து வரும் சுயதொழில் முயற்சியாளர்களின் பொருளாதார நிலைமைகள் மேம்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (33)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்க பணிமனையின் மண்டபத்தில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் தற்போது வாழ்ந்து வரும் ஊன முற்றோருக்கான புனர்வாழ்வுத்திட்டங்கள், மற்றும் சுயதொழில் ஊக்குவிப்புக்களை வழங்குதல் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன.எனவே சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (33)

# யாழ். இல் பாடசாலைகள் தோறும் சுகாதார விழிப்புணர்வு மன்றங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் சுகாதார விழிப்புணர்வு மன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.அண்மைக்காலமாகப் பரவி வரும் டெங்குநோய்த் தாக்கம் குறித்துப்பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் டெங்கு நோயின்தாக்கத்தைக கட்டுப்படுத்த முடியும். இதற்காக சுகாதார விழிப்புணர்வு மன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.

இவ்வாறான சுகாதார விழிப்புணர்வு மன்றங்களூடாக நடத்தப்படவுள்ள சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு சுகாதார சேவை உத்தியோகத்தர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர், ஆகியோரது ஆலோசனைகளும் உதவிகளும் பெறப்படவுள்ளன. (33)

# நாய்களுக்குத் தடுப்பூசி உரிமத் தகடுகள் வழங்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையின் கச்சாய் உபபணிமனைப் பிரிவில் 500இற்கும் மேற்பட்ட நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டு உரிமத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் இரண்டாவது கட்டமாய் ஏனைய பிரதேசங்களில் இன்று முதல் இப்பணிகள் விரைவாக நடைறபெவுள்ளது எனக் கொடிகாமம் பிரதேச சபையின் செயலாளர் ந.பாலச்சந்திரன் தெரிவித்தார். (28)

# சைவசமய நெறிப்பரீட்சைக்கு 30ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குக!

யாழ்.சைவபரிபாலனசபையின் சைவசமய நெறிப் பரீட்சைக்காக பாடசாலை ரீதியாக விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோருடைய விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் இலக்கம் 66 கல்லூரி வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள சைவபரிபாலன சபை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# இயல்பு நிலையை தோற்றுவிக்கக் கோரும் மக்கள் போராட்டத்தில் கலந்து கொள்க!

## யாழ்.மாவட்ட தே.எ.பேரவை கோரிக்கை

மக்கள் இயல்பு நிலை பாதிப்பு, புலம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு, தென்தமிழீழம், மலையகம் போன்ற தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்ட கொலைகள் என்பனவற்றைக் கண்டித்தும் இலங்கைத்தீவின் சமாதானம் அரசியல் சமூகப்பொருளாதாரம், சுபீட்சம் என்றவகையில் போரினால் பாதிக்கப்பட்ட வடகிழக்குப் பகுதியின் தற்போதைய யதார்த்த நிலை மற்றும் இன்றுள்ள சூழ்நிலை குறித்தும் சர்வதேசத்திற்கும், சிறிலங்கா அரசிற்கும் எடுத்துக் காட்டுவது மட்டுமன்றி அவர்களது அசமந்தப் போக்கைக் கண்டித் தும் வரும் வியாழக்கிழமை காலை நடைபெறவிருக்கின்ற குடா நாடு தழுவிய மக்கள் போராட்டத் திற்கு தேசிய எழுச்சிப்பேரவையின் ஊரக,பிரதேசக் கிளை உறுப்பினர்கள் கிராம ரீதியான மக்கள் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து பேரணிக்கான மக்கள் அணியைத்திரட்டுமாறு தேசிய செயலகம் எழுச்சிப் பேரணியின் இவ்வறிக்கை மூலம் கேட்டுள்ளது. (33)

# சட்ட விரோத மணல்அகழ்வு மண்கும்பான் மக்கள்முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகத்தில் உள்ள மண்கும்பான் பிரதேசத்தில் சட்ட விரோதமாக மணல் அகழும் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

அண்மைக்காலமாக மேற்படி பிரதேசத்தில் உள்ள கடற்கரைகளிலும் குடிமனைகளை அண்மித்தும் இடம்பெறும் இச்சட்டவிரோத மணல் அகழ்வுகளால் இப்பிரதேசத்தில் வெள்ளப்பெருக்குகளும், கடல் அரிப்புகளும் இடம் பெறக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது.இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து அப்பகுதி மக்கள் பல தடவை பொலிசாரிடம் முறையிட்டுள்ள போதும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்கள் முன்வரவில்லை எனவும் மக்கள் குறை கூறியுள்ளனர். (33)

# புன்னாலைக் கட்டுவன்,நிலாவரை, நவக்கிரிப்பகுதியில் பரவிவரும் பார்த்தீனியச் செடி குறித்து மக்கள்அச்சம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன், நிலாவரை வீதி மற்றும் நிலாவரைப் பகுதி நவக்கிரிப்பகுதி, புத்தூர் மேற்குப்பகுதி போன்ற பிரதேசங்களில் விவசாயிகளுக்குத் தீமை விளைவிக்கும் பார்த்தீனியம் எனும் தாவரம் மிகவும் அதிகளவில் காணப்படுகிறது.

அப்பகுதி விவசாயிகளை ஏன் கட்டுப்படுத்தவில்லை என்று கேட்ட போது தாம் தமது காணிக்குள் உள்ளவற்றை அழிக்கிறோம் ஆனால் வீதிகள் மற்றும் பொது இடங்களில்இருக்கும் பார்த்தீனியத்தில் இருந்து சிறிது காலத்தில் மீண்டும் அதிகளவில் முளைக்கிறது என்கிறார்கள்.

இப்பகுதியில் ஒரு வருடத்திற்கு மேலாகப் பார்த்தீனியம் பரவி வருகிறது. இதனை அழிப்பதற்கு எவரும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. இப்பகுதியில் ஒரு பெரிய கமநல கேந்திரநிலையம் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# திருக்கேதீஸ்வர ஆலயக் காணியில் 20 குடும்பங்கள் குடியேற்றம்

(மன்னார்)

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியின் திருப்பணிச் சபையினருக்குச் சொந்தமான காணியில் ஒரு குடும்பத்திற்கு இருபது பேஸ் காணி வீதம் இருபது குடும்பங்களுக்குக் காணி வழங்கப்பட்டு மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

கடந்த பதினாறு வருடங்களாக இப்பகுதியில் மக்கள் எவரும் வசிக்கவில்லை. தற்சமயம் இவர்கள் இங்கு குடியேறியதை அடுத்து போக்குவரத்து, மின்சாரம், நீர் விநியோகம் போன்றன மன்னார் அரச அதிபரால் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை தற்போது மக்கள் வழமை போலத் திருத்தலத்திற்குச் சென்றுவருகின்றனர். (மி)

# மீளக்குடியேறிய மக்களுக்கு பயன்தருமரங்கள் வழங்கல்

(மன்னார்)

மன்னார் புதுக்கமம் மீளக்குடியேறிய மக்களுக்கு வேல்ட்விசன் அமைப்பு பயன்தரு மரக்கன்றுகளையும் அதற்கான இரு பசளைகளையும் இலவசமாக வழங்கியுள்ளது. இதன்போது மா, தேசி,தென்னங் கன்றுகளை வழங்கிய இந்த நிறுவனம் அவற்றின் நடுகை முறைகள் போன்ற ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது. (மி)

## புதிய கட்டடத் திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனப் புதிய கட்டடம் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பெறவுள்ளது.மேற்படி வைபவத்தில் அரச, அரசசார்பற்ற நிறுவனப்பிரதி நிதிகளை கலந்து நிகழ்வினை சிறப்பிக்கும் வண்ணம் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## காசி.பொன்னம்பலம்

கிளிநொச்சி மாவட்ட கண்டாவளைப்பிரிவு விவாக, பிறப்பு, இறப்புப் பதிவாளரும், சமூக, சமய தொண்டருமாகிய காசி பொன்னம்பலத்தின் திடீர் மறைவு எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவுத் துயரால் துயருறும் குடும்பத்தின் துயரில் நாமும் இணைந்து கொள்வதுடன் அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்கு இறையருள் வேண்டியும் பிரார்த்திக்கின்றோம்

விவாக, பிறப்பு,<br>இறப்புப் பதிவாளர் சங்கம்,<br>கிளிநொச்சி மாவட்டம்.

(சி-9837)


# வெளிநாட்டு வேலைவாய்ப்பா?

இதோ!கவலையே வேண்டாம்

டோகாவா?அல்லது கட்டாரா?

- 20 நாட்களுக்குள் பயணம்
- உணவு இலவசம்,சம்பளம் 500 Q D
- வேலைநேரம் 8மணித்தியாலம்
- விரும்பினால் 6 மணித்தியாலம் மேலதிக வேலை

அமெரிக்க நிறுவனத்தில் 150இற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் – கைவசம் விஸா

நீங்கள் ஜெனரல்லேபர் அல்லது ஹெல்ப்பர் ஆக விரும்பினால் உடன் தொடர்பு

A.A.மைக்கல்<br>0777-279813

(சி.9313)

உங்களிற்காக மிக விரைவில் யாழில் கிளை


# வீரச்சாவு அறிவித்தலும் 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்



ஜனனம் 1977 10 19

வீரமரணம் 2004 05 02

## லெப். இலக்கியன்

(அகஸ்ரின் வசந்தரூபன்)

வீட்டிலே நீ இருந்தாய் வசந்த ரூபனாக<br>நாட்டின் விடுதலைக்காய் இலக்கியன் ஆனாய்-சாள்ஸ் அன்ரனி<br>விசேட படையணியின் வீரனாக<br>களம்பல கண்டு காலில் விழுப்புண் கொண்டாய்

'நவமறி கூட'த்தில் கலைகள் பெற நின்றாய்-நீ<br>நற்பெயரோடு 'அருமை' க்கு வந்தாய்.<br>புலனாய்வு வீரனாகப் பயிற்சியும் பெற்றாய்-உன்<br>புன்னகையால் அனைவரின் மனதினை வென்றாய்

மெய்யது நொந்து ஈன்றாள் அன்னை-நீ<br>உய்வாய் உலகில் என்றெண்ணினோம் தம்பி-உன்<br>கையது சோர கடல் தின்றதே உன்னை- இது பொய்யாக வேண்டுமென<br>அழுகிறோம் வெம்பி


2004.05.02 ஆம் திகதியன்று முல்லைக் கடற்பரப்பில் நீரில் மூழ்கி வீரச்சாவடைந்த லெப். இலக்கியன் (அகஸ்ரின் வசந்த ரூபன்), அமரர்கள் அகஸ்ரின்,திரேசம்மா ஆகியோரின் அன்பு மகனும், ஜெயராணி, கிறிஸ்ரிரூபன்,குயின்மேரி,ஞானரூபன்,அமரர் சுதர்ஜினி(ஓவியா) ஆகியோரின் பாசமிகு சகோதரருமாவார்.

இன்று காலை 7.00 மணிக்கு. வட்டக்கச்சி புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெறும். அன்னாரது ஆத்ம சாந்தித் திருப்பலியிலும்,அன்னாரது இல்லத்தில் இடம்பெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.அத்துடன்,இத்துயரைப் பகிர்ந்துகொண்ட அன்புள்ளங்களுக்கு எமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(4702)

தகவல்:-<br>அகஸ்ரின் கிறிஸ்ரிருபன்,<br>213,சிவசுந்தரம் வீதி,<br>வட்டக்கச்சி.

# நினைவலைகள்



## மேஜர் பகலவன்

சிவாநந்தன் – ஸ்ரீமுரளி(கிச்சா,சன்)

சம்பவம்:- தன்னாமுனையில் தேசவிரோதிகளின் வஞ்சகத்தால் ஏற்பட்டது

மண்ணின் முத்தாக<br>31-12-1974

மண்ணின் வித்தாக<br>06-05-2004

கனவுகள் பல சுமந்து<br>களமாடிய புலிவீரனே!<br>பகலவா,<br>உறவுகள் பலசூழ்ந்து<br>உறவாடி மகிழ்ந்த வேளை<br>தலைவனது இலட்சியத்தை

மனதினில் சுமந்து<br>விடுதலை வேள்விக்கு உரமூட்டியவனே,<br>இன்று நீயுமா? எம்<br>தேசத்தின் விடுதலை விருட்சத்திற்கு<br>உரமாகிப் போனாய்,<br>உன்கனவுகள் மலரும்<br>எம் தாயகத்தில் நிஜமாக மாறும்

(4608)

தகவல்:-<br>ம.காந்தி குடும்பத்தினர்<br>(உடன்பிறவா சகோதரன்)

# பாராளுமன்றத்தில் நெருக்கடியும் சந்திரிகாவின் "சமாதான" நகர்வுகளும்

அண்மையில் சந்திரிகா தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை அழைத்துப் பேச்சுக்கள் நடத்தியிருந்தார். இது தமிழர்கள் மத்தியிலே கவனம் செலுத்தக்கூடிய விடயமாக அமைந்துள்ளது. இங்கே கவனம் எனும் போது சந்திரிகா மீது நம்பிக்கை பிறந்து விட்டது என்று அர்த்தமல்ல. பேச்சுக்கள் நடத்துவோம், இடைக்கால நிர்வாகசபையை ஏற்றுக்கொள்ளுவோம். அபிவிருத்தியைத் தொடங்குவோம் என வாய்ப்பாடு போல கூறிக்கொண்டிருக்க மறுபக்கம் சந்திரிகாவின் கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பி யோ இசைந்து கொடுக்காத கடும் போக்கிலே நிற்கிறது. இங்கு ஜே.வி.பி.கடும் போக்கிலே நிற்பதற்குக் காரணம் சந்திரிகா, புலிகள் முன்வைத்த இடைக்கால திட்ட யோசனையைப் பரிசீலிக்க ஏற்றுக்கொண்டமையாலேயாகும்.


இவ்வாறு ஜே.வி.பி. சந்திரிகாவின் தீர்மானங்களுக்கு மட்டும் முட்டுக்கட்டை போடுவதோடு நின்றுவிடவில்லை. அவர்கள் இலங்கையின் அரசியல் தீர்வு முயற்சியிலும் ஒரு சாத்தியமான நிலைப்பாட்டைச் சிந்திக்க இன்னும் தயாராகவில்லை என்பதேயாகும். ஆக மொத்தத்தில் ஜே.வி.பி.யின் தீர்வுதான் என்ன? என்று கேட்கப்படுமாயின்! இக்கேள்விக்கு சிங்கள மக்கள் மத்தியிலும் பெரும்பாலானோருக்கு இன்னும்விடை தெரியாது. தமிழ் மக்கள் மத்தியிலும் விடைகள் இல்லை. இன்றைய அரசியலிலே தாங்கள் எப்போதும் பிரகாசித்துக்கொண்டு இருக்க வேண்டும் எனும் ஒரு நோக்கமும் தங்களின் ஒத்துழைப்பு இன்றி ஆட்சியாளர்கள் எதற்கும் நகர்ந்துவிடமுடியாது அல்லது நகர்ந்துவிடக்கூடாது என்ற நரிக்குணம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரத்தை வைத்துக் கொண்டு இருந்தும் கூட ஒரு முழுமையான பலம் இல்லாமல் திணறிக் கொண் டிருக்கும் இந்த நிலையில் ஜே.வி.பி.யின் நெருக்குவாரங்களும் நாட்டின் பொருளாதார முன்னேற்ற நிலைமைகளும் அவரை அடுத்தகட்டத்திற்கு நகர்த்திச் செல்ல எத்துணை உதவப்போகிறது என்றோ அல்லது வீழ்ச்சிக்கு இட்டுச்செல்லப் போகின்றது என்றோ கூறுவது என்பது இலகுவான தொன்றல்ல. சேற்றுக்குள் காலைவைத்து விட்டு எடுக்கவும் முடியாமல் கழுவவும் முடியாமல் இருக்கின்றது. அவரது நிலைமை ஜே.வி.பி.யுடன் கூட்டணி அமைக்கும் விடயம் தொடக்கம் அவர் விளங்கிக்கொள்ள முடியாதவர் அல்ல. ஆனால் இவ்வாறான ஓர் கூட்டணியை அமைக்கும் முன்பே வர இருந்த விளைவுகளைப்பற்றி நன்கு அறிந்திருக்கக்கூடியவராயிலும் தமது (அரசின்) கட்சியின் எதிர்காலம் பெரும் கேள்விக் குறியாகி விட்டுவிடுமோ என்ற அச்சம், இதற்கு ரணிலின் கடந்தகால ஆட்சியிலே சமாதானத்தின் பெயரால் அவர் நகர்த்த முற்பட்ட காய்கள், அவர் புலிகளுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகள், வளர்ச்சிக்கான மொட்டுக்களை வெளிக்காட்டிய பொருளாதாரம் என்பன அவரது கட்சிக்கும் அவருக்கும் பெரும் பீதியை உருவாக்க சந்திரிகா பலவழிகளிலும் ரணிலின் ஆட்சிக்கான முட்டுக்கட்டைகளைப் போட்டு ஒரு கட்டத்தில் ஆட்சியையே கலைத்துவிட்டார். இவ்வாறு அவர் அவசரப்பட்டு செய்வதற்காகவே ஜே.வி.பி.யுடன் கூட்டை உருவாக்க வேண்டிய தவிர்க்க முடியாத தேவையை உணர்ந்து கொண்டார். இதற்காக இவர் எப்படியான சேறு என்று தெரிந்துகொண்டிருந்தும் அதற்குள்ளே காலை வைத்தார். இப்போது எடுக்கவும் முடியாமல் கழுவவும் முடியாமல் இருக்கிறார்.

இதேவேளையில் உலக அரங்கு சந்திரிகா அரசின் நாடகத்தை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது. இங்கே பார்வையாளர் களினுள்ளே தான் மத்தியஸ்தம் வகிப்ப வர்களும் உதவியாளர்களும் அடங்கிய அவையினர் இருக்கிறார்கள்.

பார்வையாளர்களை சந்திரிகா கவர வேண்டும் அல்லது பார்வையாளர்கள் நாடகத்தைப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளும் பட்சத்திலேதான் வெற்றிக்கான வழி பிறக்கும். அவ்வாறு வெற்றிக்குரிய பாதையிலே இட்டுச்செல்ல கடும் பிரயத்தனம் செய்யவேண்டும். அதற்காகவே இன்று சந்திரிகா பெரும் முயற்சி செய்துகொண்டு இருக்கிறார்.

சமாதானப் பேச்சுக்கள் இறுக்க நிலையினை அடைந்துநிற்க பாராளுமன்றத்திலும் பெரும்பான்மையை எதிர்க்கட்சிகள் வைத்துக்கொண்டு பீதியைக்கொடுக்க வேறு வழியை உருவாக்கவும் முடியாமல் கண்டுகொள்ளவும் இயலாமல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை அழைத் துப் பேசியுள்ளார். இதன்பின்னணிபற்றி இங்கே சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை.. தனக்கு நெருக்கடிகள் ஏற்படும் போதெல்லாம் சமாதானம் அல்லது சமாதானப் பேச்சுக்கள் எனும் சொற்பிரயோகம் அவரைக்காக்க வைக்கும் பிரதான மூலப்பொருளாகிவிட்டது. அதன்பாற்பட்டதாகவே அண்மையில் அவரது






திருப்பங்கள் நிறைந்த பேச்சுக்களும் அறிக்கைகளுமாக வெளிவருகின்றன.

சபாநாயகர் தெரிவுக்கு முன்னர் சமாதானப் பேச்சுக்கள் பற்றி எவ்வித அக்கறையையும் அவசரமும் காட்டாமல் இருந்த சந்திரிகா சபாநாயகர் தெரிவிலே அடைந்த பின்னடைவுகள் அவரை சமாதான சொற்களிலே கவனம் செலுத்தவைத்தது. அவ்வேளையிலேதான் நோர்வேயை உடனே அழைத்தார். இரண்டு, மூன்று தடவை வன்னிக்கும் கொழும்புக்கும் அலையவைத்தார். சமாதானப பேச்சுக்களிலே புலிகள் நின்ற உறுதியான நிலைப்பாட்டால் அதாவது இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை உருவாக்கத்தின் உடனடி அவசியமும் அது பற்றியே பேச்சுக்கள் தொடங்கப்படுதல் வேண்டும் என்ற செய்தியைக் கேட்டதும் வேறுவழியின்றி அதனையும் ஏற்றுக்கொண்டு பேச்சுக்களைத் தொடங்குவதாக உறுதியளித்தார். ஆயினும் இதனை ஜே.வி.பி எதிர்க்க முற்பட்டதனால் முன்வைத்த காலை சற்றுப் பின்நோக்கி வைக்கத் தொடங்கினார். இதனால் சமாதானப் பேச்சு முயற்சிகள் ஆடாமல் அசையாமல் நின்றுவிட்டது. நோர்வேயின் அனுசரணையாளர்களும் நாடு திரும்பினர்.

இந்த நிலை யிலே நடைபெற்ற பாராளுமன்றின் இரண்டாவது அமர்வு அவ்வ ளவு அமளிதுமளி இல்லாமல் எதிர்க் கட்சியினரின் ஒத்துழைப்புடன் பிரதி சபாநாயகர் தெரிவிலேயே முடிவடைய பெரும்பான்மை பலத்தை நிரூ பிக்கும் தேவையில் இருந்து தப்பிக் கொண்டது. ஐ.ம.சு.முன்னணி அரசு இதனால் சமாதானப் பேச்சின் அவசியம் சந்திரிகா வாயில் உச்சரிப்பது குறைந்து விட்ட நிலையில் அடுத்த நான்காவது பாராளுமன்ற அமர்வானது சந்திரிகா தலைமையிலான அரசாங்கத்துக்கு வேப்பங்காயாகவே இருந்த அதேவேளையில் ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அமளிதுமளியும் அதனால் மேற்கொள்ளப்பட்ட ஒத்திவைப்பினாலும் தமது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கவேண்டிய தேவையில் இருந்து மீண்டும் தப்பிக்கொண்டது. ஆயினும் பாராளுமன்றத்திலே ஆளும் கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட குழப்பங்களும், பிக்குகள் மீதான தாக்குதல்களும் நிச்சயமாக அரசுக்கு அபகீர்த்தியை உண்டுபண்ணும் நிகழ்வாகவே மக்களால் பார்க்கப்பட்டிருக்கும் இந்த நிகழ்வு எதிர்க்கட்சியினருக்கு மிகவும் வாய்ப்பானதொரு சம்பவமாகவும் எதிர்க் கட்சியினருக்கு நன்மதிப்பை உருவாக்கும் ஒருசந்தர்ப்பமாகவும் இருந்தது மட்டுமல்ல அவர்கள் ஒன்று கூடி பொதுவானதொரு நிலைப்பாட்டிற்கு வரத்தூண்டிய ஒரு நிகழ்வாகவும் அதாவது ஆளும் கட்சியை இந்த நிலையிலேயே வைத்திருக்க முடியாது என்ற நிலைக்கு அவர்களைத் தீர்மானிக்க வைக்கும் அளவினதாகவும் இருந்தது இது சந்திரிகா அரசுக்கு பெரும் பீதியை உரு வாக்க அவர் தனது அடுத்த காட்சிக்கு தயார் செய்வதற்காக தமிழ்த்தேசிய கூட்டமைப்பை அழைத்துப் பேசினார். இது அவர் இறுக்க நிலையில் இருந்து தளர்வை உருவாக்க எடுத்த முயற்சியாகவே கருதப்படுகிறது. அதாவது மீண்டும் புலிகளின் கோரிக்கையை ஏற்றுப் பேச முடியும் என்பதும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஒப்படைத்து தொடர்ந்து நிரந்தர தீர்விற்கான முடிவை எட்டும் பேச்சுக்களை தொடர்ந்து நடத்துவது என்பதும் அவரது சந்திப்பின் போதான வாக்குமூலமாக இருந்தது. எதிர்க்கட்சிகள் இணைந்து கொண்டு வரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தமிழ்க் கட்சிகளை பிரித்தெடுப்பதன் மூலம் தமது அரசுக்கு உரு




**ஸ்ரீபன்**

(தொடர்ச்சி 13ஆம் பக்கத்தில்)

# பதினோராவது ஆண்டில் கால்பதிக்கும் வெண்புறா

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் இன்று தனது பத்தாவது அகவையை நிறைவுசெய்துகொண்டு சேவையில் பதினோராவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. அரசசார்பற்ற நிறுவனமாக இயங்கி வெடிபொருட்களினால் பாதிப்படைந்து கால்,கை போன்ற உறுப்புக்களை இழந்தோருக்கு இலவசமாக சேவைகளை வழங்கி வருகின்றது. இந்நிறுவனத்



தின் கடந்தகால சேவைகள் பற்றி அந் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் சந்திரசேகரம்பிள்ளை அவர்களைச் சந்தித்துக் கேட்டபோது,

**** வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு தூண்டுகோலாக இருந்த காரணிகள் என்ன?***

எமது நிறுவனம் 1994ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதனை ஆரம்பிப்பதற்கு முக்கிய காரணிகளாக அமைந்தவை சிறிலங்கா இராணுவத்தினரால் தமிழர் தாயகப்பகுதிகளில் புதைக்கப்பட்ட வெடிபொருட்களினால் தமது அங்கங்களை இழந்து பல்வேறு இடர்களை எதிர்நோக்கி வந்த மக்களுக்கு செயற்கையான உறுப்புக்களை பொருத்துவதன் மூலம் அவர்களின் வாழ்வை மாற்றி அமைக்க முடியும் என்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு அக்காலப் பகுதியில் யாழ்ப் பாணத்தில் இயங்கிய ஓரிரு தனியார் நிறுவனங்களின் சிறிய அளவு நிதியுத வியுடன் இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

**** ஆரம்பிக்கப்பட்ட கால்பகுதியில் நிறுவனத்தின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்திருந்தது. சேவையை முழுமையான அளவில் செய்யக்கூடியதாகவிருந்ததா?***

1994ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியில் கண்ணிவெடி, மிதிவெடிகளின் தாக்கம் ஓரளவு குறைவாக இருந்த காலப்பகுதி இதன் காரணமாக அன்றைய எமது உற்பத்திகள் ஓரளவு மக்களின் தேவையைப் பூர்த்தியாக் கக்கூடியதாக இருந்தது. மேலும் நிறுவனம் ஆரம்பித்த காலப்பகுதி யாகையால் மக்களுக்கு எமது செயற் பா[illegible] பற்[illegible]ிய விளக்கம் போ[illegible]ளவு[illegible] [illegible]ருந்தது. இதன் கார[illegible]ாக எம்[illegible] செயற்கை உறுப்புக்களைப் பெறும் வழமையாளர்களின் தொகையும் குறைவாகவே இருந்தது. ஆகவே அந்தக் காலப் பகுதியைப் பொறுத்த வரையில் மக்களின் தேவைகளை ஓரளவு பூர்த்திசெய்யக் கூடியதாக எமது உற்பத்திகள் அமைந்தி ருந்தன.

****1995–1996ஆம் ஆண்டுகளில் சிறிலங்கா இராணுவபடையெடுப்புக்களின் பின் யாழ். மண் முற்றாக பாரிய இடப்பெயர்வைச் சந்தித்தபோது இந்த நிறுவனம் செயற்பாட்டு ரீதியாக இழப்புக்களைச் சந்தித்ததுண்டா?***

ஆம் யாழ்ப்பாணம் பாரிய இடப் பெயர்வுக்குள்ளான போது எமது நிறுவனம் அங்கிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் இயங்கியது. பின்னர் இங்கிருந்து இடம் பெயர்ந்து கோணாவில், உயிலங்குளம் ஆகிய பகுதிகளில் இயங்கியது. பின்னர் புதுக்குடியிருப்பில் இயங்க ஆரம்பித்தது. இதன் போதே எமது நிறுவனத்தின் செயற்பாடுகள் உற்பத்திகள் என்பன அதிகரிக்கப்பட்டன. அக்கால நிலைமைக்கேற்பவே எமது செயற்பாடுகளை அதிகரிக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டது.

இதன்போதே எமது நிறுவனத்திற்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவு கிடைக்க ஆரம்பித்தது. தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிர்வாகப் பொறுப்பினைத் தொடர்ந்தும் பொறுப்பேற்று நடாத்திவர சர்வதேச உதவி நிறுவனங்களான யுனிசெவ், யு.என்.எச்.சி.ஆர், கெயார் போன்றன எமக்கு போதுமான நிதியுதவியையும் ஏனைய உதவிகளையும் செய்துவந்தன. அத்தோடு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையும் எமக்கு பெருமளவில் கிடைத்தது. எங்களோடு நிரந்தரமாக இணைந்து செயற்படுகிறது. பின்னர் அது எமக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றது.

**** தற்போது சர்வதேச மட்டத்தில் வெண்புறா நிறுவனம் அரசசார்பற்ற நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா? அதற்கு சாதகமாக அமைந்த சிறப்பான காரணிகள் ஏதாவது உண்டா?***

ஆம் இப்போது எமது நிறுவனம் சர்வதேச மட்டத்தில் ஓர்அரச சார்பற்ற நிறுவனமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அத்தோடு உலக நாடுகள் அனைத்திலும் எமது தொடர்பகங்கள் இயங்கி வருகின்றன. குறிப்பாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் செயலகங்கள் அமைந்துள்ள அனைத்து நாடுகளிலும் எமது தொடர்பகங்கள் அமைந்துள்ளன.

**** உங்களது உற்பத்திக்குரிய மூலப்பொருட்கள் எவ்வாறு பெறப்படுகின்றது. அவைபோதுமான அளவில் கிடைக்கக்கூடியதாக உள்ளதா?***

ஆரம்பத்தில் உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டே ஜெயப்பூர் கால் என்ற ஒருவகை உறுப்பினைத்தயாரித்து வந்தோம். ஆனால் இப்போது இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து மூலப்பொருட்களை இறக்குமதி செய்து உயர்தொழில்நுட்ப வசதிகளுடன் நீண்டகாலம் பாவிக்கக்கூடியவாறு தயாரித்து வருகின்றோம். இதற்கான தொழில்நுட்பப் பயிற்சி இங்கிலாந்து தொழில்நுட்ப வியலாளர்கள் அவ்வப் போது வந்துபயிற்சி அழித்து வருவதனால் தரமான முறையில் உற்பத்திகளை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது.

இப்போது எமது மக்களின் தேவைக்கேற்ப எமது உற்பத்திகளை மேற்கொள்ளக் கூடியதாக இருப்பதோடு பலஇடையூறுகள், இடப்பெயர்வுகள் என்பவற்றின் பின்னரே நாம் இன்று பதினோராவது ஆண்டில் காலடிஎடுத்து வைக்கின்றோம்.

**நேர்காணல்**
**இ.சசிக்குமார்.**

# வைரஸ்காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோர் தொகை உயர்வு

## -மருதங்கேணி கிராமிய வைத்திய அதிகாரி தகவல்

(அலுவலக செய்தியாளர்)

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் தினமும் சிகிச்சை பெறவருபவர்களில் 75 வீதத்திற்கும் அதிகமானவர்கள் வைரஸ் காய்ச்சல் காரணமாக சிகிச்சை பெறுகின்றனர் என மேற்படி வைத்தியசாலையின் வைத்தியர் எஸ். சண்முகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த யுத்தகாலத்தில் இவ் வைத்தியசாலைக்குரிய கட்டடங்கள் அழிவடைந்தன. இதனால் இந்த வருடம சனவரி மாதம் இந்தப்பகுதியில் அரச மருத்துவமனை இயங்கவில்லை. தற்போது ஐந்து மாதங்களாகவே தான் இப்பகுதியில் அரச வைத்தியசாலை இயங்கிவருகிறது. எனினும் இந்த மருத்துவமனையில் போதிய மருந்துகள் இல்லை இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக மின்சார வசதி இல்லாத நிலையில் குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்துப் பாதுகாக்க வேண்டிய ஊசி மருந்துகள் எவையும் இல்லை. இதனால் நோயாளர்கள் நீண்டதூரம் பயணித்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்குச் சென்று தமது தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

தினமும் வைத்திய சிகிச்சைக்காக 90 முதல் 100 பேர் வரையானவர்கள் வருகிறார்கள். இவர்களில் 75 வீதமானவர்கள் ஒரு வித வைரஸ் காய்ச்சல் காரணமாகவும், 10 வீதமானவர்கள் வயிற்றோட்டம் காரணமாகவும், ஏனையோர் பிற நோய்களுக்காகவும் சிகிச்சை பெறுகின்றனர் எனவும், மலேரியாநோய் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (லோ,தீ)

# திருமலை மாவட்டத்தில் 'வெண்புறா' கண்ணிவெடி விழிப்புணர்வு நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தில் வெண்புறா நிறுவனத்தினர் கண்ணிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வுச் செயற்பாட்டினை தற்பொழுது மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் திருகோணமலை மாவட்ட ஆரம்பபுரி கிராமத்தில் இயங்கிவரும் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் வெடிபொருட்கள் அச்சுறுத்தல்கள் உள்ள இனங்காணப்பெற்ற கிராமங்களில் இவ் விழப்புணர்வுச் செயற்பாட்டினை முன்னெடுத்து வருகின்றது.

அப்பகுதிப் பாடசாலைகள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், அலுவலகங்கள் மூலம் மக்களை ஒன்றுதிரட்டிமேற்கொள்ளப் பெற்றுவரும் இவ் விழிப்புணர்வுச் செயற்பாட்டின் மூலம் அப்பகுதிகளில் மிதிவெடி விபத்துக்களை தவிர்க்கவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் மேற்படி பணி முக்கியத்துவம் மிக்கதாக அமைந்துள்ளதென மக்கள் தெரிவித்துள்ளனர். (சோ,கு)

# இராணுவ வெடிபொருள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு -- மாங்குளம் வீதியில் பழைய இராணுவமுகாம் அமைந்திருந்த பகுதியின் முன் வீதியில் வெடிக்கப்படாத நிலையில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருள் மனிதநேய கண்ணிவெடிஅகற்றும் 'பிரிவினரால் சனிக்கிழமை பாதுகாப்பாக அகற்றப்பட்டது.1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில்முல்லைத்தீவில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் தமது பாதுகாப்பிற்காக புதைக்கப்பட்ட வெடிபொருளே இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டு அகற்றப்பட்டது. இவ் வீதியால் பெருமளவான மக்கள் சென்று வருவதும் வாகனப்போக்குவரத்து நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது. (20)

# அடிப்படை வசதிகள் வேண்டும்

முல்லைத்தீவு இந்துவித்தியாலயம் எந்தவிதமான அடிப்படை வசதிகளுமின்றி இயங்குகின்றது. 60 பிள்ளைகள் கல்விகற்ற போதும் அதிபரும் ஒரு தொண்டர் ஆசிரியருமே கல்விகற்பிக்கின்றனர். ஒருதற்காலிக கொட்டகை மட்டுமே உள்ளது.கிணறு வசதியோ, மலசல கூடமோ இல்லாத நிலையில் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதை அவதானிக்க முடிந்தது.கட்டடத்திற்கான நிதியினை நிக்கொட் நிறுவனம் வழங்கிய போதும் அதனைப் பொறுப்பெடுத்த ஒப்பந்தக்காரரால் இதுவரை அத்திவாரம் கூட இடப்படவில்லையென இப்பாடசாலை அபிவிருத்திச் சபையினர் கவலை தெரிவித்தனர். (20)

# சாவு அறிவித்தல்

## திருமதி தம்பிராசா தெய்வானைப்பிள்ளை

வடமராட்சி கிழக்கு வேம்படி உடுத்துறை, தாளையடியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட திருமதி-தம்பிராசா-தெய்வானைப்பிள்ளை 11.06.2004. அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பிராசா அவர்களின் அன்பு மனைவியும், சரஸ்வதி (இந்தியா), சிறீஸ்கந்தராசா, முத்துராசா(T.M.R), யோகராணி, சின்னப்பு(நோர்வே), பரமானந்தராசா (டென்மார்க்), பார்வதிஇந்திரா பாலராசா(லண்டன்), சவுந்தரராசா (நோர்வே) ஆகியோரின் அன்புத்தாயாரும், சபாரத்தினம்(இந்தியா), சிரோண்மணி, தமிழ்ச்செல்வி,வேலுப்பிள்ளை, பத்மாவதி (நோர்வே), ஜெயந்தி(டென்மார்க்), கோபாலகிருஸ்ணசாமி, றெஜினா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

இவரது ஈமக்கிரியைகள் மகன் முத்துராசாவின் (T.M.R) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 15.06.2004. மாலை 2.00 மணியளவில் உடுத்துறை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
த.முத்துராசா(மகன்) T.M.R
வேம்படி,
உடுத்துறை,
தாளையடி.

(4701)


# தமிழீழப் போக்குவரவுக் கழகப் பயணியர் பேருந்துப்பணி

மேற்படி பணி அரச பணியாளர்களின் நலன்கருதி 18.06.2004 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனைப்பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு

**கிளிநொச்சி முறிகண்டி**

| கிளிநொச்சி | இரணைமடுச்சந்தி | முறிகண்டி |
|---|---|---|
| மாலை-4.30 | மாலை-4.40 | மாலை-5.00 |

**முறிகண்டி-கிளிநொச்சி**

| முறிகண்டி | இரணைமடுச்சந்தி | கிளிநொச்சி |
|---|---|---|
| மாலை-5.00 | மாலை-5.20 | மாலை-5.30 |

முகாமையாளர்,
கிளிநொச்சி.
தமிழீழப் போக்குவரவுக் கழகம்.

(சி.9721)

# தமிழீழப் போக்குவரவுக் கழகப் பயணியர் பேருந்துப்பணி

வெள்ளாங்குளம்-பூநகரி பேருந்துப்பணி வெள்ளாங்குளம் -பூநகரி-கிளிநொச்சி பணியாக மாற்றம்

மேற்படி பணி 18-06-2004 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில்நடைபெறும் என்பதனைப் பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு

**வெள்ளாங்குளம்-பூநகரி-கிளிநொச்சி**

| வெள்ளாங்குளம் | முழங்காவில் | செய்புரம் | செம்மன்குன்று | பூநகரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| காலை7-30 | காலை8-00 | காலை 8-30 | காலை-9.30 | காலை10.00 | காலை-11-15 |

**கிளிநொச்சி, பூநகரி, வெள்ளாங்குளம்-**

| கிளிநொச்சி | பூநகரி | செம்மன்குன்று | செயபுரம் | முழங்காவில் | வெள்ளாங்குளம் |
|---|---|---|---|---|---|
| பகல் 1.00 | 2.15-2.30 | 3.00 | 4.00 | 4.30 | 5.00 |

முகாமையாளர்,கிளிநொச்சி.
தமிழீழப் போக்குவரவுக் கழகம்.

(சி-9722)



# கவலையளிக்கும் கரைச்சிக் கோட்ட விளையாட்டுப்போட்டிகள்

முத்தையனூர் துஷ்யந்தன்

கிளிநொச்சி கரைச்சிக் கோட்டப் பாடசாலைகளிற்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் கடந்த 11ஆம் திகதியில் இருந்து நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் 35இற்கு மேற்பட்ட பாடசாலைகளை உள்ளடக்கியதாக உள்ள கரைச்சிக் கோட்டத்தின் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் வெகுவிமர்சையாக நடைபெறும் என்ற எதிர்பார்ப்புடன் போட்டி நடைபெறும் மைதானத்திற்குச் சென்ற போது ஏமாற்றமே கிடைத்தது.

உலகின் கண்களை நோக்கவைத்துக் கொண்டிருக்கின்ற கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டிவீதியை அண்மித்ததாக உள்ள கரைச்சி கோட்டப் பாடசாலைகள் பங்கு கொள்ளும் விளையாட்டுப் போட்டி சிறந்த முறையிலேயே அமையும் என எதிர்பார்ப்பதில் தவ றில்லை.ஆனால் விளையாட டுப் போட்டிகள் நடைபெற்ற முறை யினை பார்க்கின்ற போதுதான் வேதனையாக வுள்ளது.





முட்களும் புற்களும் நிறைந்திருக்கின்ற விளை யாட்டு மைதானத்தில் ஓடு பாதைகள் சீரானமுறையில் அமைக்கப்படாத நிலையில் மாணவர்கள் விளையாட்டில் பங்கு கொள்ளும் நிகழ்வு பார்ப்பவர்களை வேதனையோடு சிந்திக்கத் தூண்டியது மந்தைகள் மேயும் தரிசுநிலம் போல் காட்சிதந்த மைதானத்தில் தொட்டாச்சுருங்கி போன்ற முட்ச் செடிகள் தாராளமாகவே காணப்பட்டது. மட்டப்படுத்தப்படாத சமதரையற்றதாய்க் காணப்பட்ட மைதானப்பரப்பில் மைதான நிகழ்விற்கான ஓடுபாதைகள் ஏதோ பேருக்கு போடப்பட்டது போல் அடையாளங்கள் தெளிவாகத் தெரியாமல் போடப் பட்டிருந்தன இவ் ஓடு பாதையில் கூட முட்களும், கற்களும் அகற்றப்படாத நிலையில் போட்டி நிகழ்வுகளை நடாத்தியதானது. சம்பந்தப்பட்டவர்களின் அசமந்தப் போக்கையே காட்டுகின்றது.

வளர்ச்சி கண்டுசெல்லும் உலகின் போக்கிற்கு மாணவர் சமூகத்தை வழிப்படுத்துகின்ற கல்வி இலக்கைக் கொண்ட கல்வி சம்பந்தப் பட்ட உயர் மட் டங்கள் மாண வர்க ளின் விளையாட் டுத்துறை சம்பந் தமாக எவ்வளவு சிரத்தை எடுத்துச் செயற்பட்டு வருகின்றன. என் பதையே மேற்படி சம்பவம் காட்டுகிறது.

இது தொடர்பாக அங்கு கடமையில் இருந்த பாடசாலை அதிபர்ஒருவரிடம் வினாவியபோது தமக்குமேல் உள்ள துறைசார்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தில் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதாக குற்றம் சாட்டினார்.

எது எவ்வாறாயினும் உலகு இன்றைக்கு விளையாட்டுத் துறைக்கு கொடுத்துவரும் முக்கியத்துவத்தைப் பார்க்கின்ற போது எதிர்கால சந்ததியாக உருவெடுத்து வரும் மாணவர் சமூகத் திற்கு துறைசார்ந்த அதிகாரிகள் என்ன நிலையில் தமது பணியினை வழங்கி வருகின்றனர் என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை.

மாணவர்களது வளர்ச்சிப்படிகளில் முக்கியமானது விளையாட்டு. அந்த விளையாட்டுத் துறையை ஊக்கப்படுத்த வேண்டிய கட்டாய பணியும் பொறுப்பும் கல்வித் துறை சார்ந்த அதிகாரிகளையே சார்ந்தது. நிலைமை இப்படி இருக்கையில் இவ் அதிகாரிகள் தமக்கிடையே முரண்பட்டுக்கொண்டு மாணவர்களது எதிர்காலத்தில் விளையாடுவது வேதனைக் குரியது.கடந்த காலங்களில் போர் அனர்த்தங்களால் எமது மாணவர் சமூகம் பாரிய நெருக்கடியை எதிர்கொள்வது என்பது மறைக்க முடியாத உண்மை. ஆனால் தற்போது அப்படிப்பட்ட நிலைமைகளில் இருந்து மெல்லமெல்ல விடுபட்டுவரும் எமது மாணவர் சமூகத்திற்கு புதுமைகளைப் புகுத்தி பாதிப்பு இடைவெளிகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டியது கட்டாயமாக உள்ளது. தற்போதைய காலகட்டத்தில் மாணவர்களின் விருத்தியை மழுங்கடிக்கக் கூடியதான முறையில் செயற்படுவதானது வரலாற்றுக்கு தவறாகவே கருதப்பட முடியும்.

# பிரகாசிக்கத்தவறிய நட்சத்திரத்தின் அஸ்தமனம்



அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணியின் மற்றுமொரு சிறந்த ஆரம்பதுடுப்பாட்ட வீரரான மைக்கல் ஸ்லேட்டர் ஓய்வு பெறப்போவதாக அண்மையில் அறிவித்திருக்கிறார். இந்த அறிவிப்பு அவரின் சகாவான முன்னாள் வீரரான ஸ்ரீவ் வோவின் அறிவிப்பைவிட ஒருபணிவான அறிவிப்பாகும் ஏனெனில் ஒருகாலத்தில் இவர் துடுப்பாட்டத்தில் பிரகாசித்திருப் பினும் ஸ்ரீவ்வோ போன்ற ஏனைய வீரர்களைப் போன்று பின்னணியில் பிரகாசிக்கத் தவறிய மையாகும் 34வயதுடைய ஸ்லேட்டர் கிட்டத்தட்ட 3வருடமாக அணியில் சேர்த்துக் கொள்ளப்ப டா விட்டாலும் பின்னர் சேர்த்துக் கொள்ளப்படு வார் என உறுதியளிக்கபட்டது. கடந்த காலங்களில் அவர் அனேகமான போட்டிகளுக்கு அழைக்கப்படுவார் என நம்பியிருந்தாலும் ஆக உள்ளூரில் நடந்த மூன்று போட்டிகளுக்கு மட்டுமே அனுமதிக்கப் பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார். அத்துடன்அவர் முதுகுப்பிடிப்பு நோயினாலும் பாதிக்கப்பட்டார்.

2001ஆம் ஆண்டு பம்பாயில் நடைபெற்ற போட்டியின் போது இந்திய வீரர் ராகுல் ராவிட் அடித்த பந்தைப் பிடித்து ஆட்டமிழப்பு கோரப்பட்டமை நிராகரிக்கப்பட்டது.அதன் பின்பு ஆறு மாதங்களில் இவர் தேசிய அணியில் இருந்து நீக்கப் பட்டார். ஆயினும் நியூசவுத்வேல்ஸ் அணிக்காக விளையாடினார். அப்போது இவருக்கு முதுகுவலிப் பிரச்சினை இருக்கவில்லை. அங்கு அவரின்ஆட்டத்தின் சிறப்பை ஒருவரும் கண்டு கொள்ளாதிருந்தனர். காரணம் ஆசியஅணிக்கு பின்னர் வந்த ஜாம்பவான்களின் செல்வாக் காகும். மைக்கல் ஸ்லேட்டர் 1993ஆம் ஆண்டு தனது இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது லோட்ஸில் சதமடித்துத் தன்னை பிரபல்யப் படுத்திக் கொண்டவராவார்.இது அவுஸ்தி ரேலிய அணிக்கும் பெருமையைத்தந்ததுடன் மக்கள் மனதிலும் இடம்பிடிக்கவைத்தது.

அதன்பின்னர் இங்கிலாந்தில் 1994ஆம், 95ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற போட்டிகளில் தொடரின் முதலாவது பந்திலேயே பவுண்டரியை விளாசியவராவார். அது போலவே இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியா சென்ற வேளையிலும் அடிலேய்ட்டில் நடைபெற்ற ஒருபோட்டியில் இவர் சிறப்பாக ஆடினார். இவரின் ஆட்டம் பற்றி இங்கிலாந்து தினசரிகளும் இவரைப் பாராட்டியதுடன் சிறப்பான ஆட்டம்பற்றி குறிப்பிட்டிருந்தது. 1996ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற போட்டியொன்றின் போது (புதுடில்லி) அணிதோல்வியைச் சந்திக்கப்போவதை உணர்ந்த இவர் (ஆட்டமிழந்த வேளை) துடுப்பை (BAT) வீசியெறிந்துள்ளார்.ஆயினும் அவர் தனது ஆட்டமிழப்புக்கு வருத்தம்தெரிவித்தார்.

மைக்கல் ஸ்லேட்டர் தனது 74 டெஸ்ட் போட்டிகளில் 14 செஞ்சரிகளைப் பெற்றுள்ளார். 9 முறை 90 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார். ஒவ்வொரு 5 வது இனிங்சிலும் 90 ஓட்டங்க ளுக்கு மேல் பெற்றுள்ளார். அவரின் சராசரி 44.அவர் தான் கலந்துகொண்ட போட்டியில் ஓட்டம் பெறாமல் ஆட்டமிழப்பதில் இருந்து தப்பியிருக்கிறார். இந்த வகையில் மத்தியு ஹெய்டனை இவர் வென்றுள்ளார். 2001 ஆம் ஆண்டு பம்பாயில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் ட்ராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்ததே இவருக்கு ஏற்பட்ட முதல் சரிவாகும்.

பின்னர் நடைபெற்ற ஆஷஸ் தொடரின் போது போட்டி நடைபெறமுன்பு நித்திரை கொண்ட தற்காக இவர் கண்டிக்கப்பட்டார். அத்துடன் அவரின் திறமையும் மந்தகதியா னமையால் அவருக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அதாவது இவருக்குப் பதிலாக மார்ட் டின் லாங்கூர் அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்எனினும் கடைசி நேரத்தில் ஸ்லேட்டர் நோய்வாய்ப் பட்டதையடுத்து அவரின் பிரகாசம் மங்கிவிட ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்தே அவர் ஓய்வு பற்றி அறிவித்துள்ளார்.

வடிவேல்

## இலங்கையின் சுதந்திரத்தின் பின் விளையாட்டு அபிவிருத்தி ஒரு நேர்நோக்கு

சென்றவாரத் தொடர்ச்சி

3 தேசியவிளையாட்டு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டமையும் கண்காணிக்கப்பட்டமையும்.

4. விளையாட்டுப் பாடசாலை நிறுவப்பட்டமை

5 தேசியவிளையாட்டு நிதியம் ஆரம்பிக்கப்பட்டமை.

6 விளையாட்டு நூலகம் திறக்கப்பட்டமை

7 பிரபலமான விளையாட்டுக்களில் நாடளாவிய போட்டிகளுடன் தேசியவிளையாட்டு விழா ஏற்பாடு செய்யப் பட்டமை.

8 விளையாட்டுக்களுக்கான கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டமை.

9 சீரான பயிற்சி மற்றும் கற்கைத்திட்டங்கள்.

10 விளையாட்டு தொடர்பான பிரசுரங்கள்.

11 விளையாட்டு விடுதி நிறுவப்பட்டமை.

12 விளையாட்டு தொடர்பாக மகாநாடு ஒன்று நடத்துதல்.

13 விளையாட்டு மருத்து வப்பிரிவொன்றை ஆரம்பித்தல்.

14 சுகத தாஸ தேசிய விளையாட்டு அரங்கினை விளையாட்டுக்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் கொண்டு வருதல்.

15 மாவட்ட மட்டத்திலான விளையாட்டு மையங்களை ஏற்படுத்தல்.

16 நீட் மாவத்தை விளையாட்டு அரங்கை விருத்தி செய்தல்.

17 மாவட்ட விளையாட்டுப் பயிற்சி நிலையங்கள் ஆரம்பித்தல்.

18 விளையாட்டுத்துறை புலமைப் பரிசில்களை பெற்றுக் கொடுத்தல்.

இப்படியாக பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறையில் இப்போது இருக்கின்றன. இருந்தும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இன்றை வரை, ஆகக்குறைந்த வசதிகளை "மாவட்ட மட்டத்தில் விளையாட்டு அமையங்களை ஏற்படுத்தல்" இற்ரை வரை நடைமுறைப் படுத்தப்படவில்லை இது தொடர்பாகக் கடந்த 2002 ஆம் ஆண்டு விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் கொழும்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு இடை நடுவில் காத்து நின்கின்றது என்பதனை குறிப்பிடலாம் இலங்கை அரசியல் யாப்பின் 13வது திருத்தத்திற்கு ஏற்ப விளையாட்டு விடயம் தொடர்பான பொறுப்புக்களில் அதிக பங்கு மாகாண விளையாட்டு சபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கும் (வடக்கு-கிழக்கு) விளையாட்டுத்துறைக்கு பணம் ஒதுக்கப் படுகின்றதா என்றால் அதுவும் முயற் கொம்பா கவே காட்சியளிக்கிறது இப்படியான நிலையில் எமது பகுதி எப்போது அபிவிருத்தி செய்யப்படும்.

(முற்றும்)

அ.கனகராசா
மாவட்ட விளையாட்டு அலுவலர்
கிளிநொச்சி

# சர்வதேச ஊனமுற்றோர் தினம்



புரையோடிப் போயுள்ள யுத்த அனர்த்தங்களினால் இடப்பெயர்வென்றும், உயர்பாதுகாப்பு வலயமென்றும், வான், கடல் தாக்குதலென்றும் பல்வேறுபட்ட இயற்கைக்கு மாறான காரணங்களினால். வடக்கு கிழக்கு வாழ் மக்கள் தத்தமது இயல்பு வாழ்க்கையை பறிகொடுத்த நிலையில் தமது சொந்த மண்ணை விட்டு வெளியேறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப் பட்ட போதிலும். தாம் சென்ற இடங்களிலெல்லாம் தமது பாரம்பரிய வாழ்வு முறைமைகளில் தவறாது ஒழுகி வருகின்றனர் என்றால் அவர்களின் மனோ வலிமையும் உடல் வலிமையுந்தான் முக்கிய காரணிகளாகும்.

எதையும் தாங்கும் இதயம் என்பது எம்மவர்களுக்குப் புதிதல்ல. இடப் பெயர்வு காரணமாக எண்ணற்ற மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டகன்று பாதுகாப்புக்காக எங்கெங்கு சென்றார்களோ அங்கெல்லாம் ஏதாவது ஒரு உருவத்தில் கண்ணிவெடி என்னும் அரக்கன் இந்த அப்பாவி மக்கள் மீது தன் கைவரிசையைக் காட்டிய துடன் அவர்களின் எதிர்காலத்தையே சின்னா பின்ன மாக்கியதுதான் விந்தையிலும் விந்தை. மனிதரால் ஏவப்பட்ட எறிகணைக்குத் தப்பமுடிந்த மனிதருக்கு அதே மனிதரால் மறைத்து வைக்கப்பட்ட கண்ணிவெடிகளுக்கு கடுகளவேனும் தப்பமுடியவில்லை. இந்த விபரீதத்தின் விளைவுதான் இன்று ஏராளமான அப்பாவிகள் தங்கள் கால்களையும் வேறு உடல் உறுப்புக்களையும், ஏன் உயி ரையும் இழந்து வாழ்க்கையின் எல்லைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இப்படியான பாதிப்புக்களின் தாக்கம் சிறியவர், பெரிய வர், ஏழை, பணக்காரன் என வித்தியாசமின்றி சகலரை யும் அவர்களது சுதந்திரமான வாழ்வில் பாரிய தடை களை உண்டாக்கியதுடன், சமூகத்தில் நின்றும் தனிமைப்படுத்தியுள்ளது இன்றுள்ள பூதாகரமான பிரச்சினையாகும். ஒரு குடும்பத்தின் தலைவனோ அல்லது ஒரு உறுப்பினரோ போரின் விளைவால் பாதிக்கப்பட்டால் அப்பாதிப்பானது அக்குடும்பத்திலுள்ள அத்தனைபேரையும் ஏதோ ஒரு வகையில் தாக்கத்திற்குள்ளாக்குகின்றது. அது மாத்திரமல்லாமல் அவர் சமுதாயத்தின் மாறுபட்ட பார்வைக்கு உள்ளாகியும், சிலவேளைகளில் அவர் ஒரு மாற்றுவலிமை கொண்ட மனிதப்பிறவி என்பதை ஏற்றுக் கொள்ள இயலாத நிலையிலும் எமது மக்கள் இருந்து வருகின்றனர் என்பதை நாம் மனவேதனையுடன் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

இப்படியான சூழ்நிலையில்தான் திறமையும் நம்பிக் கையும் இழந்த நிலையில் தமது எதிர்காலத்தினை எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு சோர்வுற்றிருந்த பலநூற்றுக்கணக்கான அப்பாவி மக்களுக்குக் கை கொடுத்து அவர்களை மீண்டும் சமுதாய நீரோட்டத்தில் சமபங்குடையவர்களாக்கிப் புத்துயிரளிக்கும் உன்னத பணியில் வெண்புறா நிறுவனம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது.

இந்நிலையில் வெண்புறா நிறுவனத்தின் வரலாற் றினை சற்று அறியும் நோக்குடன் சிறிது பின்னோக்கிப் பார்ப்பது சாலவும் பொருத்தமானதாக அமையுமென்பது கருத்தாகும். சோதனைகளும் வேதனைகளும் நிறைந்த கால கட்டமாகிய 1995ம் ஆண்டின் ஆரம்பத்தில் இப்படியான ஓர் செயற்கை உறுப்பு நிறுவனம் எமது மக்களுக்கு நிச்சயம் தேவை என்பது உணரப்பட்டது. கடின உழைப்பின் பயனாக துறைசார் அறிஞர்கள், நலன் விரும்பிகள், மனிதநேய அமைப் புக்கள் ஆகியோரின் கூட்டுமுயற்சியில் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட செயற்குழுவினர் 1994ஆம் ஆண்டு ஆனிமாதம் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் கொக்கு வில் குளப்பிட்டிச் சந்தியில் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தினைத் தொடங்கிவைத்தனர். நிறு வனத்தின் யாப்பு விதிகளின் பிரகாரம் முக்கிய தொழிற் பாடுகளாக 01). செயற்கைக் கால்களைத் தயாரித்துப் பொருத் துதல் 02). வலுவிழந்தவர்களுக்கு புனர்வாழ்வு வசதிகளை திட்டமிட்டு அமுலாக்குதல் 03). மனித இடர்களைத் தடுத் தலும், குறைத்தலுக்குமான எல்லா மனிதநேய சேவைக ளையும் அதிகரித்தலும், ஊககுவித்தலும் ஆகியன இனம் காணப் பட்டு வலியுறுத்தப்பட்டுள்ளன.

சுமூகமான முறையில் திறம்பட செயற்பட்டு வந்த நிறுவனம் 1995ஆம் ஆண்டு இடம் பெற்ற பாரிய யுத்தத்தின் காரணமாக குடாநாட்டிலிருந்து இடம் பெயரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகியது. இருந்தபோதிலும் வெண்புறா நிறுவனம் தனது தனித்துவம், திறமை, முயற்சி, சேவை போன்றவற்றில் பின்னடைவு அடைந்ததில்லை. வன்னிப் பெரு நிலப்பரப்பில் இராணுவ ஆக்கிரமிப்பும் வெடிபிடிகளும் நிறைந்திருந்த இந்தக்காலகட்டத்தில் ஒரே இடத்தில் நிலைத்திருக்க இயலாத காரணத்தினால் கிளிநொச்சி, கோணாவில், உயிலங்குளம், புதுக்குடியிருப்பு போன்ற இடங்களுக்கெல்லாம் தனது இருப்பிடத்தினை மாற்றவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட போதிலும் தனது இலக்கினை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது. இவ்விதப் பின்னணியில் தான் புதுக்குடியிருப்பில் தனது கால்களை சற்று ஆழப்பதித்து தன்னை வலுப்படுத்திக் கொண்டது. பின்னர் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் பின்னணியில் யுத்த நிறுத்த உடன்படிக்கையும் சமாதானப் பேச்சுவார்த்தையும் இடம் பெற்றதையடுத்து வெண்புறா தனது கிளைகளை மீண்டும் யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் திறந்துள்ளதுடன். தனது தலைமைக்காரியாலயத்தினையும் கிளிநொச்சியில் ஆரம்பித்து சிறந்த முறையில் இயங்கி வருகின்றது.

## செயற்பாடுகள்

வெண்புறா நிறுவனத்தின் சேவைகள் நாளாவட்டத்தில் விரிவாக்கம் பெற்றுள்ள காரணத்தினால் உள்நாட்டில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் தனது செல்வாக்கினை பெருக்கிக் கொண்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளைகள் அமைந்துள்ள எல்லா உலக நாடுகளிலும் வெண்புறா நிறுவனத்தின் சேவைகள் நன்கு அறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஆரம்பம் முதல்கொண்டு ஜெய்ப்பூர் பாணியில் தயாரிக்கப்பட்ட கால்களுக்குப் பதிலாக புதிய, சர்வதேச தரத்திற்கேற்ற பொலிப்புறொப்பின் கால்களைத் தயாரித்து வழங்கக்கூடிய வழிவகைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இப் புதிய தொழில் நுட்பத்திற்குரிய இயந்திரசாதனங்கள், உபகரணங்கள், மூலப்பொருட்கள் என்பனவற்றுடன் பூரண தொழில் நுட்பத்தினையும் உலக நாடுகளில் இயங்கிவரும் தமிழர் புனர்வாழ்வுக் கழக மையங்கள் மூலம் அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ள முடிந்தமை எமது செயற்பாடுகளுக்கு சர்வதேச ரீதியா கக் கிடைத்துள்ள ஒப்புதலேயாகும். இன்றைய நிலையில் புதிய தொழில் நுட்பம் மூலமாகத் தயாரிக்கப்பட்ட சுமார் 500 செயற்கைக் கால்கள் பாவனையிலுள்ளன. மேலும் 1500 வரையிலான ஜெய்ப்பூக் கால்கள் புதிய தொழில் நுட்பத்திற்கேற்றவாறு மாற்றியமைக்கப்படவுள்ளன.

நிறுவன யாப்பு விதிமுறைகளின் பிரகாரம் செயற்கைக் கால்கள் தயாரித்து வழங்கும் பணிகளுக்குப் புறம்பாக பயனாளிகளின் தேவைகளை இனங்கண்டு அத்தேவைகளுக்கேற்றவாறு முச்சக்கரவண்டி, சக்கரநாற்காலி, ஊன்றுகோல் பாதஅணி முதலிய உப உறுப்புக்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வகை யில் 118 முச்சக்கர வண்டிகள், 130 சக்கர நாற்காலிகள், 425 ஊன்றுகோல்கள் முதலியன எமது வன்னிப் பெருநிலப் பரப்பில் பாவனையிலுள்ளன. மேலும் வலுவிழந்தவர் களின் வாழ்க்கை முறைகளை மீண்டும் சமநிலைப் படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு வசதிகள் மூலமாகவும் ஏராளமானவர்களுக்குத் தொழில் சார்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் சிறு அளவிலான வியாபாரம்; நன்னீர் மீன்பிடிப்பு, துவிச்சக்கரவண்டி திருத்தம் முதலிய வருமான அதிகரிப்பு முயற்சிகளுக்கு நிதி உதவிகளும் வலுவிழந்த சிறுவர்களுக்கும், வலுவிழந்த குடும்பங்களிலுள்ள சிறுவர்களுக்கும் அவர்களது கல்வி வளர்ச்சியினைக் கருத்திற் கொண்டு ஆண்டுதோறும் தெரிவு செய்யப்பட்ட 300 சிறார்களுக்கு நிதியுதவியும் வழங்கியுள்ளதுடன் நடப்பு ஆண்டில் மேலும் 250 சிறார்களுக்கு இவ்வுதவியை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறிய அளவிலான குறைந்த வளங்களுடன் ஆரம்பிக் கப்பட்ட இந்த நிறுவனம் இன்று சகல வளங்களும் கூடிய சர்வதேச தரத்திலான தொழிற்பாடுகளை ஊன முற்ற மக்களுக்கு அர்ப்பணிப்புடன் வழங்கிவருகின்றது என்றால் இப்புனித பணிகளின் பெருமைகள் யாவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தையே சாரும் என்பதில் ஐயமில்லை. எனவே அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் அதேவேளை சகல விதத்திலும் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய, வழங்கிக்கொண்டிருக்கும்

- வெண்புறா நிர்வாக சபைக் குழுவினர்
- கிளி, முல்லை. அரசசார்பற்ற நிறுனங்களின் இணையங்கள்
- கெயார், யூ.என்.எச்.சீ.ஆர், யுனிசெவ், யுஎன்டீபீ
- சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம்
- உள்நாட்டு வெளிநாட்டுஅன்பர்கள் ஆதரவா ளர்கள்
- எமது செயற்பாடுகளை உலகெங்கும் எடுத்துச் செல்லும் ஊடகவியலாளர்கள்.

ஆகிய யாவரையும் நினைவு கூர்ந்து எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் மென்மேலும் அவர்களின் புனித பணிகள் தொடரவேண்டும் என்பதிலும் ஆவலாயிருக்கின்றோம்.

(சி.9723)


# காஷ்மீரில் உல்லாசப் பயணிகள் 4பேர் தீவிரவாதிகளின் தாக்குதலில் உயிரிழப்பு

## உல்லாசப் பயணிகள் வரவைத் தடுப்பதே நோக்கமென அறிவிப்பு


(புதுடில்லி)

**காஷ்மீர் தீவிரவாதிகள் ஹோட்டல் ஒன்றின் மீது மேற் கொண்ட தாக்குதலில் 4 பேர் உயிரிழந்துள்ளதுடன் 23பேர் காயமடைந்துள்ளனர்.**

சிறிநகரிலுள்ள பிரபல உல்லாசப்பயணிகள் ஹோட்டல் ஒன்றின் மீதே தீவிரவாதிகள் கைக்குண்டுத்தாக்குதலை மேற்கெண்டுள்ளனர். இத்தாக்குதலுக்கு அல்-நஸ்வீன் என்ற தீவரவாத அமைப்புநேற்றுமுன்தினம்உரிமை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.கொல்லப்பட்டவர்கள் உல்லாசப் பயணிகள் எனத் தெரிவிக்கப்படுகிறது.காஷ்மீர் பிரதேசத்திற்கு உல்லாசப் பயணிகள் வருவதைத் தடுக்கும்நோக்கில் இத்தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.



காஷ்மீர் மாநிலத்திலுள்ள ஏரியில் படகுச் சவாரி செய்ய சுற்றுலாப் பயணிகள் மிகவும் விரும்புவர், தீவிரவாதிகளின் அச்சம் காரணமாக அந்த ஏரிப் பகுதியிலும் ஏராளமான இராணுவ வீரர்கள் ரோந்துப் பணியில் ஈடுபடுகின்றனர்




இந்தியாவினால் அண்மையில் பரீசித்துப் பார்க்கப்பட்ட பிரமாஸ் ஏவுகணை.

## அமைச்சர் படுகாயம்

(புதுடில்லி)

பஞ்சாப் மாநில உள்ளூராட்சித்துறை அமைச்சர் சவுத்திரி ஜக்ஜித்சிங் கார் விபத்தில் படுகாயமடைந்துள்ளார்.

டில்லியிலிருந்து சண்டிகாருக்கு சென்று கொண்டிருந்த போது அம்பாலா அருகே அவரது கார் திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை மீறி அருகிலிருந்த சாக்கடைக் கால் வாய்க்குள் வீழ்ந்தது.

இச்சம்பவத்தில் அமைச்சருடன் கூட வந்திருந்த மூவரும் காயமடைந்தனர்.படுகாயமடைந்தவர்கள் ஹெலிகொப்டர் மூலம் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

## வை.கோ மனு

(சென்னை)

அமெரிக்காவிலிருந்து திரும்புவதற்குதமக்கு நீதி மன்றம் விதித்த கால வரம்பை மேலும் இரண்டு நாட்கள் நீடிக்கவேண்டுமென்று ம.தி.மு.கழக பொதுச் செயலாளர் வை.கோ சென்னை உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

'பொடோ' சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டிருந்த அவர் சென்னைஉயர்நீதிமன்ற அனுமதியின் பேரில் அமெரிக்கா சென்றார். இம்மாதம் 20 ஆம் திகதிக்குள் அவர் நாடுதிரும்ப வேண்டும் என்று நீதி மன்றம்நிபந்தனைவிதித்திருந்தது.

## இந்தியாவின் கோரிக்கை பாகிஸ்தானால் நிராகரிப்பு

(புதுடில்லி)

இந்திய தனியார் விமான சேவை நிறுவனங்கள் தங்களது விமான சேவையினை பாகிஸ்தானுக்கும் அதன் உள்ளூர் சேவைக்கும் ஈடுபடுத்த அனுமதிக்கப்பட வேண்டும் எனும் இந்தியாவின் கோரிக்கையினை பாகிஸ்தான் நேற்றுமுன்தினம் நிராகரித்துள்ளது.

தற்போது இருநாடுகளிடையே விமானப் போக்குவரத்தை மேம்படுத்துவது மட்டும் தான் தமது நோக்கம் என்று பாகிஸ்தான் விமானப் போக்குவரத்துக் கழக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்திய தனியார் விமான சேவை நிறுவனங்கள் தங்களது கோரிக்கையினை இந்திய வெளியுறவு அமைச்சகத்திடம் தெரிவித்திருந்தனர்.

இதனை இந்திய வெளியுறவுத் துறை பாகிஸ்தானிடம் தெரிவித்திருந்தது.தற்போது பாகிஸ்தான் இந்தக்கோரிக்கையி.னை நிராகரித்துள்ளது.

## - தமிழகத்துக்கு காவிரி நீரை விடுவது பற்றி -

# மத்திய நீர்வள ஆணையக அதிகாரிகள் ஆலோசனை

(புதுடில்லி)

காவிரிப் பிரச்சினையில் நிபுணர் குழு அளித்த அறிக்கையின் படி அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கை தொடர்பாக மத்திய நீர்வள ஆணையக அதிகாரிகள் இன்று முக்கிய ஆலோசனை நடத்துகின்றனர்.

காவிரியில் இருந்து உடனடியாகத்தமிழகத்துக்கு நீரைத் திறந்து விடுமாறு வலியுறுத்தி முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மற்றும் தமிழக எம்.பிக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து இரு மாநில அணைகளின் நீர்க் கொள்ளவைப் பரிசீலனைசெய்யமத்திய நிபுணர் குழு, நீர்வள ஆணையத்திடம் அறிக்கையொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

இந்த அறிக்கையின் படி கர்நாடக அணைகளில் கணிசமான அளவு நீர் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழகத்தின் குழுவை சாகுபடிக்கு நீரைத் திறந்து விடுவது குறித்து ஆராய நீர்வள ஆணையகம் மத்திய நீர்வளத் துறை அமைச்சின் செயலாளர் . தலைமையில் இன்று ஆலோசனை நடத்துகிறது. இதில் எடுக்கப்படும் முடிவுகளின் அடிப்படையில் நிபுணர்களின் அறிக்கையுடன் காவிரி நீர் நிலை ஆணையகத்தை கூட்டுவது உள்ளிட்ட பரிந்துரைகளை பிரதமருக்கு நீர்வள ஆணையகம் அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை காவிரி நதியை தமிழகத்துக்கு திறந்து விடுவது என்ற பேச்சுக்கே இடமில்லையென கர்நாடக மாநில முதலமைச்சர் நேற்றுத்தெரிவித்துள்ளார்.



தமிழகத்தில் வானூர் அருகே விவசாய நிலத்தில் 300 அடி ஆழமான குளாய்க்கிணறு தோண்டும் போது தீப்பிழம்புடன் கூடிய கொதிநீர் பூமிக்கடியில் இருந்து 20 அடி உயரத்துக்கு பீய்ச்சி அடித்தது. அதை படத்தில் காணலாம்.

# மா.சபை தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் 21 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் இம்மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகுமென தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இம்மாதம் 27 ஆம் திகதி இது சம்பந்தமான விசேட நடவடிக்கை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க கருத்து தெரிவிக்கையில்:-

எமது திணைக்களம் தேர்தலைக் கண்காணிப்பதற்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அவதானிகளின் உதவியைக்கோருமெனத் தெரிவித்துள்ளார்.

# ஐ.ம.சு.முன்னணி நாட்டைப் பறிகொடுக்க எடுக்கும் முயற்சிகளைத் தடுக்கத் தயார்

## ஜாதிக ஹெலஉறுமய தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாட்டை பறிகொடுக்க எடுக்கும் முயற்சிகளை தடுப்பதற்கு தயாராக உள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இடைக்கால சுயாட்சி நிலைப்பாட்டின் கீழ் விடுதலைப்புலிகள் அமைப்புடன் ஒன்றித்துச் செயற்பட அரசாங்கம் தயாராகி வருவதாகவும் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எல்லாவெல மேதானந்த தேரர் கூறியுள்ளார்.

வடக்கு கிழக்கு சுயாட்சி அதிகாரசபைக்கான யோசனை முன்வைக்கப்பட்டபோது சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தமையை அவர்கள் தற்போது மறந்துள்ளதாகவும் மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியின் தேசத்துரோகமான வேலைத்திட்டங்களையே தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமும் முன்னெடுத்துச் செல்வதாக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## விமானப் பாகங்களை ஆராய

# உக்ரேன் நிபுணர்கள் குழு விரைவில் கொழும்பிற்கு வரும்

(கொழும்பு)

நீர் கொழும்பு கடற்பகுதியில் விபத்துக்குள்ளாகி கடலில் வீழ்ந்த மிக் 27 ரகவிமானத்தின் பாகங்களை ஆய்வுக்குட்படுத்த உக்ரேனில் இருந்து விசேட நிபுணர்கள் குழு ஒன்று இலங்கைக்கு வரவுள்ளது.

இந்த நிபுணர் குழு இந்தவாரத்துக்குள் இலங்கைக்குவருமென விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் டொனால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை உக்ரேன் தயாரிப்பான இந்த மிக் 27 ரகவிமானங்களை தொடர்ந்து விண்ணில் வைத்திருக்கக்கூடிய நேரத்தை அதிகரிப்பது தொடர்பாகவும் உக்ரேன் நாட்டு நிபுணர்கள் இதன்போது விசேட கவனம் செலுத்துவர் எனவும் விமானப்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி பயிற்சியில் ஈடுபட்டு இருந்த இந்த மிக் 27 ரக விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக கடலில் வீழ்ந்ததாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

# ரட்ணசிறி வானில் பறக்கவிட்ட சமாதானப்புறா இறந்து வீழ்ந்தது

பல்தேசியப் படைத்துறைப் பயிற்சிப் பட்டறையின் போது சிறிலங்காவின் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவால் பறக்கவிடப்பட்ட சமாதானப் புறா இறந்து வீழ்ந்துள்ளது.

குக்குளு கங்கையில் உள்ள சிறிலங்காப் படையினரின் முகாமில் இடம்பெற்ற பல்தேசிய படையினர் கலந்து கொண்ட படைத்துறைப் பயிற்சிப்பட்டறையின் போது அமெரிக்காவின் ஆசியப் பிராந்திய கட்டளைத்தளபதி, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மற்றும் பலர் கலந்து கொண்டதோடு, நிகழ்வின் ஆரம்பமாக சமாதானப் புறாக்களையும் வானில் பறக்கவிட்டனர்.

இப்பயிற்சிப் பாசறை நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட புத்தசாசன அமைச்சரும், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் படைத்துறையின் பிரதியமைச்சருமான ரட்ணசிறி விக்கிரம நாயக்காவால் பறக்கவிடப்பட்ட சமாதானப்புறா வானில் பறந்த சில நொடிகளில் இறந்து வீழ்ந்துள்ளது.

## காலபந்து போட்டியில் சூதாட்டத்தை சட்டபூர்வமாக்குக - ஆசிய கால்பந்து நிர்வாகக்குழு

கால்பந்து விளையாட்டில் சூதாட்டத்தை சட்டபூர்வமாக அனுமதிக்க ஆசிய நாடுகளை ஆசிய கால்பந்து நிர்வாகக் குழு வலியுறுத்தியுள்ளது. போர்த்துக்கல்லில் தற்போது ஆரம்பமாகி நடை பெற்று வரும் யூரோக் கிண்ண கால்பந்து போட்டிகளை மையமாக வைத்து மலேசியாவைச் சேர்ந்த ரசிகர்கள் அதிகளவில் சூதாட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

ஆனால் அந்த நாட்டில் சூதாட்டம் சட்டத்துக்கு விரோதமானதாகவுள்ளது.

இதைக்கருத்திற்கொண்டு மலேசியா மட்டுமல்லாது ஆசிய நாடுகள் அனைத்துமே சூதாட்டத்தை சட்டபூர்வமாக மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என ஆசிய சம்மேளனப் பொதுச் செயலாளர் பீட்டர் வேஸ்பின் கோரிக்கை விடுத்துள்ளதாக கோலாலம்பூரில் இருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கால்பந்தாட்டம் என்பது தொழிற்துறை போன்று மேம்பாடு அடைந்துள்ளது. பெரிய அளவில் வருமானத்தைஈட்டும் காரணியாகவுமுள்ளது.

அவ்விளையாட்டில் சூதாட்டத்தை சட்டபூர்வமாக அனுமதிப்பதன் மூலம் ஆசிய மண்டலத்தில் கால்பந்தாட்டம் மேலும் முன்னேற்றம் அடைய முடியும் என்று இவர் கூறியுள்ளார்.

-'யூரோ 2004' கால்பந்து இரண்டாம் நாள் போட்டி-

# சினடின் சிடானின் அற்புத ஆட்டத்தால் பிரான்சிடம் இங்கிலாந்து தோல்வி கண்டது

"யூரோ 2004" கிண்ண கால்பந்து போட்டியின் B பிரிவு முதல் சுற்றுப் போட்டி ஒன்றில் இங்கிலாந்து அணி எதிர்பாராத விதமாக பிரான்ஸ் அணியிடம் தோல்வி அடைந்தது.


போத்துக்கல்லில் நடைபெற்றுவரும் இப்போட்டிகளில் B பிரிவுப் போட்டி ஒன்றில் இங்கிலாந்தும் பிரான்சும் மோதிக்கொண்டன. இந்தப் போட்டியில் பிரான்ஸ் அணியின் நட்சத்திர வீரர் சினடின் சிடானின் அற்புதமான ஆட்டத்தின் மூலம் பிரான்ஸ் அணி 2-1 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றியீட்டியது.

இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணியின் தலைவர் டேவிட் பெக்காம் அடித்த பெனால்டிக் கோலை பிரான்ஸ் கோல்காப்பாளர் மிகச் சிறப்பாகத் தடுத்தமை இந்தப் போட்டியில் பிரான்ஸ் வெற்றிபெறக் காரணமாக அமைந்தது.

இதனை அடுத்து இங்கிலாந்து கால்பந்து ரசிகர்கள் தமது அணியின் தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாது வீதிகளில் இறங்கிக் கலகத்தில் ஈடுபட்டனர்..

இதன் போது பொலிசார் நடத்திய தடியடிப் பிரயோகத்தில் பலர் காயமடைந்தனர். இந்த வன்முறைகளின் போது இங்கிலாந்து நாட்டவர்கள் பலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டதாக லிஸ்பென் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இரு நாடுகளுக்குமிடையில் 36ஆவது தடவையாக நேற்று முந்தினம் நடைபெற்ற போட்டிகளில் பிரான்ஸ் வெற்றிபெற்றதன் மூலம் மூன்றாவது தடவையாகவும் ஐரோப்பாக் கிண்ணத்தை கைப்பற்றும் வாய்ப்பு பிரான்சிற்குக் கிடைத்துள்ளது.இதேவேளை பிரிவு Bயில் நடைபெற்ற மற்றுமொரு போட்டி-குறோசியா ஸ்கொட் லாந்து அணிகள் மோதிக்கொண்ட போட்டி – கோல்கள் எதனையும் பெறாத நிலையில் சமநிலையில் முடிவடைந்தது.



விளையாட்டு செய்தி

# முன்னணி டென்னிஸ் வீரர் அன்ரூரொடிக் 14 சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்



லண்டனில் நடைபெற்று வந்த 'ஸ்டெலாஆற்றோ'ஏ' வெற்றிக்கிண்ண டென்னிஸ் போட்டியில் அமெரிக்க வீரர் அன்ரூரொடிக் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளரர். பிரான்ஸ் வீரர் செபஸ்ரியன் குரோஸ்ரீனை தோற்கடித்து அன்ரூரொடிக் சம்பியன் பட்டத்தை வென்றார்.

குயின்ஸ் பார்க் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டி பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆரம்பமாகியது.

உலகின் முதன்நிலை டென்னிஸ் வீரர் அன்ரூரொடிக் உலகின் ஐந்தாம் நிலைவீரரான செபஸ்ரியன் குரோஸ்ரீனைத் இறுதியாட்டத்தில் எதிர்கொண்டார்.

உலகின் அதிவேக டென்னிஸ் வீரராகக் கருதப்படும் ரொடிக் இந்தப் போட்டியில் குரோஸ்ரீனைத் தோற்கடித்து தன்னுடைய டென்னிஸ் வாழ்வில் 14ஆவது சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

ஒரு மணித்தியாலம் 23 நிமிடங்கள் நடைபெற்ற இந்தப் போட்டியில் 7-6,6-4 என்ற நேர்செட்டில் அன்ரூரொடிக் வெற்றியீட்டினார்.

இந்தப் போட்டியின் பின்னர் கருத்துத்தெரிவித்த ரொடிக்,

தான் இந்தப் போட்டிக்குப் பின்னர் தொடர்ந்து சிலவாரங்களுக்கு ஓய்வெடுக்கப் போவதாகவும் அதனை அடுத்து டென்னிஸ் தொடரில் சிறப்புப் போட்டியான விம்பிள்டனுக்குத் தன்னை தயார்படுத்தப் போவதாகவும் தெரிவித்தார்.

## தொடக்க வீரராகக் களமிறங்கினால் சவாலை எதிர்கொள்ளத் தயார் — யுவராஜ்சிங்

இந்திய கிரிகெட் அணியின் தொடக்க வீரராக தாம் களம் இறக்கப்பட்டால் சவாலை எதித்கொள்ளத் தயாராக இருப்பதாக யுவராஜ்சிங் தெரிவித்துள்ளார்.சிறிலங்காவில் நடைபெறவுள்ள ஆசியக் கோப்பையை கருத்தில் கொண்டு இந்தியவீரர்கள் தற்போது பெங்களூரில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

பயிற்சியின் போது நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த கப்டன் கங்குலி இந்திய அணியின் தொடக்க வீரராக யுவராஜ்சிங் களமிறங்க வாய்ப்பிருப்பதாகக் கூறினார்.இந் நிலையில் நேற்று இது குறித்து கருத்துத் தெரிவித்த யுவராஜ்சிங் இந்த வாய்ப்பை சரியான முறை யில் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் சவாலை எதிர்கொள்ளத் தான் தயாராக இருப்பதாகத் தெரிவிததார்.



போத்துக்கல்-லிஸ்பன் நகரில் நடைபெற்ற (யூரோ 2004) கால்பந்து போட்டியொன்றில் இங்கிலாந்து வீரர் டேவிட் பெக்காமை வென்ற பிரான்சின் சினடின் சிடான், பெக்காமிடம் இரக்கம் காட்டுகிறார்.

# முழுமையான டெஸ்ட் தொடர் வெற்றி இங்கிலாந்துக்கு

## டெஸ்ட் போட்டியிலிருந்து கிறிஸ்கெய்ன் விடைபெற்றார்

நியூசிலாந்து அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் 3-0 என்ற அடிப்படையில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையில் நடைபெற்ற இறுதி டெஸ்ட்போட்டியில் இங்கிலாந்து அணி போட்டியின் நான்காம் நாளான நேற்று முன்தினம் 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நொட்டிங்காமில் நடைபெற்ற இந்தப் போட்டியில் வெற்றி பெறுவதற்கு 285 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில் இருந்த இங்கிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.துடுப்பாட்டத்தில் கிரஹம்தோப் டெஸ்ட் போட்டியில் தனது 14 ஆவது சதத்தைப் பெற்றார்.

அவர் ஆட்டமிழக்காது 104 ஒட்டங்களைப் பெற்றார். மார்க்பவுச்சர் 59 ஓட்டங்களையும், அஸ்லி கைல்ஸ் 56 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் கிறிஸ்கெய்ன் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.தோப் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

தொடர் ஆட்டநாயகனாக இங்கிலாந்தின் ஹார்மிசனும், நியூசிலாந்தின் மார்க் ரிச்சட்சனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்தப் போட்டியுடன் நியூசிலாந்தின் சகலதுறை வீரர் கிறிஸ் கெய்ன் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து விடைபெற்றார்.



கிறிஸ்கெய்ன்

# சிறிலங்காவின் சுழற் பந்து வீச்சாளர் முரளிதரன் போட்டிகளிலிருந்து சிறிது காலம் ஓய்வு பெற முடிவு



உலகின் முன்னணிப் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் சில மாதங்களுக்குப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற விருப்பதாக அறியவருகிறது.

அவ்வாறான முடிவை முரளிதரன் எடுப்பாராயின் எதிர்வரும் யூலை நடைபெறவுள்ள ஆசியக் கிண்ணப் போட்டிகள், அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் போட்டி, அதனைத்தொடர்ந்து இங்கிலாந்தில் நடைபெறவுள்ள ICC சம்பியன் கிண்ணப் போட்டிகளில் அவரின் அற்புதங்களைக் காணும் வாய்ப்பை ரசிகர்கள் இழக்க நேரிடும்.

இது தொடர்பாக முரளி தெரிவிக்கும் போது, தான் நிறையப் போட்டிகளில் விளையாடியிருப்பதாகவும், நினைத்த சாதனையை நிறைவேற்றிவிட்டதாகவும், தனக்கு இப்போது சற்று ஓய்வு தேவைப்படுவதாகவும், அதன் பின்னர் தொடர்ந்து இன்னும் 7 வருடங்கள் போட்டிகளில் பங்கேற்பதாகவும் தெரிவித்துள்ளார்.இதற்கிடையில் மேலும் பல சிக்கலான அனுபவங்களை முரளி சந்திக்க நேரிடும் என்பதால் அவர் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதைத் தாம் விரும்பவில்லை என அவரின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.


இதேவேளை அவுஸ்திரேலியத் தொடரில் அவுஸ்திரேலியாவில் உள்ள முக்கியமான டெஸ்ட் போட்டிகள் நடைபெறும் இடங்களை விடுத்து கெய்ன்சிலிலும்,டார்வினிலும் இரு டெஸ்ட் போட்டிகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறித்தும் முரளிதரன் திருப்திய டைந்தவராக இல்லை.

அவுஸ்திரேலியாவில் இரண்டு டெஸ்ட் போட்டிகளே நடைபெறவுள்ளன. அதிலும் முக்கியமான டெஸ்ட் போட்டிகள் விளையாடப்படும் இடங்கள் எமக்கு வழங்கப்படவில்லை. பல மற்ற சிறிய அணிகளைப் போன்று அவுஸ்திரேலியாவின் வடக்குப் பகுதியில் உள்ள கெய்ன்ஸ் மற்றும் டார்வினிலும் நாம் விளையாடவுள்ளோம். ஏனைய அணிகள் அவுஸ்திரேலியா வரும்போது சிட்னியிலும் மெல்போர்னிலுமே விளையாடுகின்றன.

முன்னர் நாமும் அங்கு தான் விளையாடினோம். எல்லாவற்றையும் விட இது இரண்டு மூன்று வாரங்கள் நடைபெறும் குறுகிய தொடராகும். எனவே இதில் பெரிதாகப் பயனடைவதற்கு ஒன்றுமில்லை என முரளிதரன் தெரிவித்துள்ளார்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு



சாவுக்கும் அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும், இலட்சியப்பற்றிற்கும் எமது மாவீரர்களுக்கு நிகர் எவருமேயில்லை என நான் பெருமிதத்துடன் கூறுவேன்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 15-06-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com

## சந்திரிகா மாறவில்லை!

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த போது அளித்த வாக்குறுதிக்கு- அதற்கு அடுத்த நாள் தொலைக்காட்சியில் ஆற்றிய உரையில், கூறிய கருத்துக்கள் மாறுபட்ட வகையில் உள்ளன. அதாவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பின் போது முதலில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து புலிகளுடன் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்திருந்த அவர், தொலைக்காட்சிப் பேட்டியில் அதற்கு மாறுபட்ட விதத்தில் பேசியுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் இருந்து இத்தகைய முரண்பாடுகள் வெளிப்படுவது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. ஏனெனில் சனாதிபதி சந்திரிகாவின் பொதுப்பண்பாகவே இது வளர்ச்சி கண்டதொன்றாகியுள்ளது. அதாவது சனாதிபதி சந்திரிகா நாளாந்தம் ஒன்று பேசக்கூடியவர் என்பதும், கூறுவதொன்று செய்வதொன்று என்ற ரீதியில் செயற்படுபவராகவும் இருத்தல் என்பதும் ஏற்கனவே நிரூபணம் பெற்றதொன்றாகும்.

சனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் மட்டுமல்ல பொதுவிலேயே இத்தகைய நிலைப்பாட்டையே கொண்டுள்ளார். எடுத்துக்காட்டாக 1994 இல் தேர்தலில் போட்டியிட்ட போது சனாதிபதி சந்திரிகா பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றும், சனாதிபதி ஆட்சி முறை ஆறு மாதத்திற்குள் ஒழிக்கப்படும் என்னும் வாக்குறுதி வழங்கினார். ஆனால் "சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு" என்ற நிலைப்பாட்டை அவர் விரைவிலேயே மாற்றிக் கொண்டு விட்டார். சமாதானத்திற்கான யுத்தம் என்ற ரீதியில் பாரிய யுத்தத்திற்கு அவர் தன்னைத் தயார்ப்படுத்தினார். இவ் யுத்தமானது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் கூட அவர் அளித்த வாக்குறுதிக்கு மாறானதாகவே இருந்தது. அதாவது சமாதானத்தை நிலைநிறுத்துவேன் எனச் சிங்கள மக்களுக்கு வாக்குறுதி அளித்தே அவர் பதவிக்கு வந்தவர் ஆவார்.

இதுபோன்றதாகவே "சனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பேன்" என்ற வாக்குறுதியும் இருந்தது. பதவிக்கு வந்த பின் ஆறு மாத காலப்பகுதிக்குள் சனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படுமென சனாதிபதி சந்திரிகா வாக்குறுதி அளித்தார். இவ்வாக்குறுதி அடிப்படையில் ஜே.வி.பி சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்தும் ஒதுங்கிக் கொண்டது. ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சனாதிபதியாகப் பதவியேற்றதும் சனாதிபதி ஒழிப்பு என்ற விடயத்தை மறந்தார். சிங்கள மக்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் குறிப்பாக ஜே.வி.பி.க்கும் வழங்கிய வாக்குறுதிகளை அவர் கண்டு கொள்ளாது விட்டார். மாறாகச் சனாதிபதியின் அதிகாரங்களைப் பிரயோகிப்பது பற்றியே அவர் அக்கறை இருந்தது. ஒரு சமயத்தில் சனாதிபதியின் அதிகாரங்களைத் தான் முழு அளவில் பயன்படுத்தவில்லை என்றும் குறைந்த மட்டத்திலேயே பயன்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆகையினால் சனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து, அதிலும் குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்து அவர் ஒரே நிலைப்பாட்டுடன் செயலாற்றுவார் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? சனாதிபதி சந்திரிகா அன்றிலிருந்து இன்று வரை அரசியல், இராணுவ நிர்ப்பந்தங்களுக்காகவே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்துப் பேசுபவராக இருந்துள்ளார். மாறாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு விடயத்திலும் தமிழ் மக்களை அரசியலில் பங்காளிகளாகவும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் அவர் இருக்கவில்லை.

ஆகையினால் "சனாதிபதி சந்திரிகா வாக்குறுதிகளுக்கு மாறாகச் செயற்படுகின்றார். நேரத்திற்கு ஒன்றாகப் பேசுகின்றார் எனக் கூறுவதும் குற்றம் சாட்டுவதும் சனாதிபதி சந்திரிகாவைப் புரிந்து கொள்ளாததன் விளைவே ஆகும். வேறு விதமாகக் கூறுவதானால் சனாதிபதி சந்திரிகாவின் குண இயல்பை மாற்றுமாறு கோருவது போன்றதாகும். சனாதிபதி சந்திரிகாவின் ஒரே இலக்கு ஆட்சி அதிகாரம் என்பது மட்டுமே. இதற்காக அவர் எத்தகைய வாக்குறுதிகளை வழங்கவும் பின்னர் அவற்றைக்கைவிடவும்/மீறவும் தயாராகவேயுள்ளார்.

ஆனால் இவற்றை உணர்ந்து கொண்டிருந்தும் அவருடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவது எதன் அடிப்படையில் என்ற கேள்வி எழுதல் கூடும். இதற்கான பதில் 'சமாதானத்திற்குத் தமிழ் மக்கள் விரோதிகள் அல்லா' என்பதை வெளிப்படுத்துவதற்கானதும், சிலவேளைகளில் சனாதிபதி சந்திரிகாவின் கடந்த காலப் படிப்பினைகளை மனதிற்கொண்டு சமாதானத்தின் அவசியத்தை உணர்ந்து கொண்டு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு இருப்பாரா? என்ற ஐயப்பாட்டின் பாற்பட்டதே ஆகும். ஆனால் சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள் அவர் மாறவில்லை/மாறப்போவதில்லை என்பதை வெளிப்படுத்[illegible]கவே உள்ளது.

-உடத்தலவின்ன படுகொலை விசாரணை-

# தலைமை நீதிபதியை நீக்குமாறு ரத்வத்த விடுத்த கோரிக்கை நிராகரிப்பு

உடத்தலவின்ன படுகொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்கின்ற தலைமை நீதிபதியை நீக்குமாறு முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

வழக்கில் பிரதிவாதியான ரத்வத்தையின் சார்பில் நேற்று ஆஜரான சட்டத்தரணி தலைமை நீதிபதியான எல்பட்நாயக்க விசாரணைகளை நடத்தக் கூடாதென வாதிட்டார். இதேவேளை அவர் வழக்கை விசாரிப்பதால் தமது தரப்பினருக்கு அநீதி இழைக்கப் படுவதாக சட்டத்தரணி கரலியத்த கூறினார். நீதிபதி விலகாத வேளை வழக்கு தொடர்பான ஆவணங்களை பிரதமநீதியரசரிடம் சமர்ப்பித்து இவ்விடயத்திற்கு தீர்வு காணுமாறு அவர் கோரியுள்ளார். இக்கோரிக்கையை பிரதிச்சட்டமா அதிபர் ஜெனரல் பாலித்த பெனாண்டோ கடுமையாக ஆட்சேபித்துள்ளார். இவ்வழக்கு ஒரு வருடத்திற்கு மேலாக விசாரிக்கப் படுகின்ற வேளை தலைமை நீதிபதியை விலக்கக் கோருவது தவறான முன் உதாரணமாக அமையுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதிவாதிகளின் கோரிக்கையை ஏகமனதாக நிராகரித்த நீதிபதிகள் குழு வழக்கு விசாரணையை எதிர்வரும் 21 ஆம் திகதிவரை ஒத்திவைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (32)

# சட்டவிரோத குடியேற்றக்காரர்களுக்கு தண்டப்பணமாக 50 இலட்சம் ரூபா

(கொழும்பு)

இலங்கையின் சட்டவிரோத குடியேற்றக்காரர்களுக்கு எதிராக விதிக்கப்படுகின்ற தண்டப்பணம் 50 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப் படவுள்ளது. சட்டவிரோதக் குடியேற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச அமைப்பின் ஒத்துழைப்புடன் மக்களைத் தெளிவு படுத்தும் செயற்திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக சிறிலங்கா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத குடியேற்றக் காரரை முற்றுகையிடும் பிரிவின் பணிபாளர் சமரதுங்க தெரிவித்துள்ளார்.

# இத்தாலி செல்ல முயன்ற 38 பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்ல முற்பட்ட 38 பேரையும் இம்மாதம் 24 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைப்பதற்கு மாத்தறை பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார். சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்ல முற்பட்ட இவர்களை நேற்று முன்தினம் வெலிகம பொலிசார் கைதுசெய்தமை தெரிந்ததே.

## மோதல் குறித்து அறிக்கை

(கொழும்பு)

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் அண்மையில் இடம் பெற்ற குழுமோதல் சம்பவம் தொடர்பாக குழுவின் விசாரணை அறிக்கை இன்று கல்வியமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்படவுள்ளது. பல்கலைக்கழகத்தில் மீண்டும் வன்முறைகள் இடம்பெறுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி சிபார்சு செய்யவென கல்வியமைச்சு குழு ஒன்றை நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹட்டன் சர்வதேச விளையாட்டரங்கு அமைப்பதில் பெரும் நிதி மோசடி

-அமைச்சர் சி.பி. ரட்நாயக்க குற்றச்சாட்டு

ஹட்டன் நோர்வூட் பகுதியில் அமைக்கப்படவிருந்த சர்வதேச விளையாட்டரங்கு தொடர்பில் நிதி மோசடி இடம் பெற்றிருப்பதாக அமைச்சர் சி.பி.ரட்நாயக்க குற்றம் சுமத்தியுள்ளார். இந்த மைதானத்தை அமைப்பதற்கான பணிகள் 1998ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் சௌரியமூர்த்தி தொண்டமானால் ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கு இதுவரை ஒரு கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவாகியுள்ளது. எனினும் புனரமைப்புப் பணிகள் இதுவரை நிறைவடையவில்லை. எனவே இதில் பாரிய நிதிமோசடி இடம் பெற்றுள்ளது என அமைச்சர் சி.பி ரட்ணநாயக்க கூறியுள்ளார். (32)

(7ஆம் பக்கத்தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில்.......

வாகும் பேராபத்தைத் தவிர்ப்பதற்காகவே இம் முயற்சியை அவர் மேற்கொண்டுள்ளார். ஒரு வேளையில் தமிழரசுக்கட்சி நடுநிலை வகித்தாலாவது.

தமது அரசின் பெரும்பான்மைப் பலத்தையும் நிரூபிக்க முடியும் என்ற நப்பாசையாகவே அவரது இந்த முயற்சி இருந்திருக்கக் கூடும். தமிழ் மக்கள் முன்வைக்கும் தீர்மானத்தை நேர்மை வழியில் நின்று ஆளும் கட்சி அரசு ஏற்றுக் கொள்ளுமாயின் உண்மையில் அவரது அரசு நெருக்கடிகளில் இருந்து மீளமுடியும், அரசைக் காப்பாற்றவும் முடியும். ஆனால் அவர் இவ்வாறு கூறுவது போல் செயலிலே இறங்குவாரா? என்பதும் சந்தேகமே. ஏனெனில் நாளொன்றுக்கும் பொழுதொன்றுக்கும் ஒவ்வொரு கருத்தை வெளியிட்டுக் கொண்டிருக்கும் அவரது குணாம்சம் அவருக்கே வெளிச்சம்.

ஏனெனில் இதற்கும் ஜே.வி.பி. கடும் எதிர்ப்பை வெளியிடும். அப்போது இவர் தனது கருத்துக்களையும், நகர்வுகளையும் மாற்ற மாட்டார் என்பது என்ன நம்பிக்கை? இப்பொழுதே இறுதியாகக் கிடைத்த செய்திகளின் படி ஜே.வி.பி. அரசு இடைக்கால அரசு ஒன்றை நிறுவும் பட்சத்தில் நாடளாவிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தப் போவதாக அறிவித்துள்ளது.

அத்துடன் இந்த இறுக்க நிலைமையைச் சீர்செய்ய மீண்டும் ஒரு தேர்தலைச் சந்திப்பதே சிறந்த வழி எனவும் கூறியுள்ளது. இவ்வளவிற்கு ஆண்டிற்கொரு தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தால் நாடு எந்த இலக்கை நோக்கிச் செல்லமுடியும்? ஜே.வி.பி.யின் இந்த நிலைப்பாடு தம்மை ஒரு பெரும் கட்சியாக வளர்த்தெடுப்பதே யாகும். இதற்காக அது ஏனைய பிரதான கட்சிகளுக்கு எத்தகைய இடையூறுகளையும் விளைவிக்கவும், நலிவடையச் செய்வதிலும் தமது செயற்பாடுகளை மேலும் தீவிரப் படுத்திக்கொண்டே செல்லும் ஆக மொத்தத்தில் சந்திரிகா அரசு எந்தவொரு தெளிவான சிந்தனையிலும், தீர்க்கமான செயலிலும் இறங்க முடியாத நிலையிலேயே இருந்து கொண்டிருக்கிறது.

இது தமிழ் மக்களின் நிலைப்பாட்டைப் பாதிக்கப்போவதில்லை. ஏனெனில் தமிழர்கள் எல்லோரும் தெளிவான நிலையிலேயே இருக்கிறார்கள். இதனால் எந்தவொரு நிலைமையிலும் யார் அழைத்து எதைச் சொன்னாலும் அவர்களின் முடிவில் மாற்றம் இருக்கப் போவதுமில்லை. ஏமாந்துவிடப் போவதுமில்லை. வரும் கால நிலைமைகள் மேலும் ஆச்சரிய மூட்டுவதாகவும், அதிர்ச்சியூட்டுவதாகவும் இருக்கும் என்பதை எதிர்பார்க்கலாம்.





எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சராசரிக் கடல் மட்டம் கடந்த 100 வருடங்களில் 10 தொடங்கி 25 சதம மீற்றர்களால் உயர்ந்துள்ளது. உலகின் பனிக்கட்டிகள் உருகுமானால் சமுத்திரங்கள் 66 மீற்றர்களால் உயர்வடையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## "போரிடும் வல்லமை சேர்ப்போம்" வெளியீட்டுவிழாவில்...





-தமிழ்க் கூட்டமைப்பினருடனான சந்திப்பில்-

# இ.நிர்வாக கட்டமைப்பின் தேவை குறித்து நெதர்லாந்து இராஜதந்திரிகளுக்கு விளக்கம்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பின் தேவை குறித்து நெதர்லாந்து இராஜதந்திரிகளிடம் நேற்று தமிழ்க் கூட்டமைப்பினர் விளக்கிக் கூறியுள்ளனர்.

நெதர்லாந்து நாட்டின் கொள்கை வகுப்பாளர் யசிந்தா ஹொக்லண்ட் மற்றும் நெதர்லாந்தின் பிரதித்தூதுவர் ஹரின் டியிற்றில் ஆகியோர் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பில் ஜோசப்பரராஜசிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது சமாதான முயற்சிகள் தொடர்பாக சனாதிபதி கொண்டுள்ளஇரட்டைக் கொள்கை அதாவது முரண்பாடான கருத்துக்கள் தொடர்பாகவும், மக்கள் விடுதலை முன்னணி ஜாதிக ஹெல உறுமய தொடர்பாக கொண்டுள்ள நிலைப்பாடு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நெதர்லாந்து பிரதிநிதிகளுக்கு விளக்கினர்.

அத்துடன் வடக்கு கிழக்கில் மீள்குடியமர்வு, மீள் கட்டுமாணம் தொடர்பில் விபரமாக விளக்கிக் கூறப்பட்டது.

இதன் போது விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரம் எதற்காகத் தேவை என்பது தொடர்பாக கேட்ட நெதர்லாந்து பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதில் தென்னிலங்கை அரசியல் நிலைமை தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

மேற்படி சந்திப்பு தொடர்பாக நெதர்லாந்து பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கவுள்ளதாகவும் இந்த விடயத்தில் நெதர்லாந்து அரசு அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஆராயும் எனவும் அவர் தெரிவித்தார். (32)

# வீரவணக்கக்கூட்டமும் நடுகல் திரைநீக்கமும்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கடற்பரப்பில் கடந்த 2003ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம்திகதி இடம்பெற்ற வெடிவிபத்தொன்றில் வீரச்சாவடைந்த லெப். கேணல் கில்லரி என அழைக்கப்படும்ஆனைக்கோட்டை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கணேசன் சிவகுருநாதனின் நினைவுக்கல் யாழ். கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டைப்பகுதியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் மாவீரரது திருவுருவப்படம் கோப்பாய்மாவீரர்துயிலும் இல்லம் நோக்கி எடுத்து வரப்பட்டது. அங்கு வீரவணக்கக் கூட்டம் இடம் பெற்றது. இதனைத்தொடர்ந்து மாவீரரது நினைவுக்கல் அவரது குடும்பத்தவர்களால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இதில் கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சுடரவன், நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன், யாழ்.மாவட்ட கடற்புலி மகளிர் பொறுப்பாளர் கல்யாணி ஆகியோர் உட்பட போராளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (33)

### பெண்போராளிகள்...

அவ் விடத்துக்கு வந்த மன்னார் அரசியல் துறைப் பொறுப்பாளர் விடயத்தை விளக்கமாக உரைத்தார். அதன்பின் மன்னார் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு இவ் விடயத்தை விசாரணை செய்துள்ளது. இச்சம்பவத்தையடுத்து மன்னாரில் சகல கடைகளும் பூட்டப்பட்டன. இன்று மன்னாரில் கர்த்தால் செய்ய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (மி)

-கனகராயன் குளம்சந்திப்பகுதியில்-


# உந்துருளி–சிற்றூர்தி விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

கனகராயன் குளம் சந்திப்பகுதியில் நேற்று இடம் பெற்ற வீதி விபத்தொன்றில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

வவுனியாவிலிருந்து கனகராயன்குளம் நோக்கி வந்த உந்துருளி ஒன்றும் கிளிநொச்சியில் இருந்து கனகராயன் குளம் நோக்கி சென்ற சிற்றூர்தி (மினிபஸ்) ஒன்றும் பிற்பகல் 2.50 மணியளவில் கனகராயன்குளம் சந்தியில் விபத்துக்குள்ளாகியுள்ளன.

இதில் உந்துருளியில் பயணித்த இரண்டு இளைஞர்களும்



காயமடைந்த நிலையில் அப்பகுதி தமிழீழக் காவல்துறையினரின் உதவியுடன் கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கந்தசாமி தவபாலன் (வயது 25) தர்மலிங்கம் சந்திரமோகன் (வயது29) என்பவர்களே காயமடைந்தவர்கள் ஆவார்கள்.

இவ்விரு இளைஞர்கள் சம்பந்தமான மேலதிக விபரங்கள் கிடைக்கவில்லை. இது குறித்து தமிழீழக்காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். (தீ)

### யாழ்...

நியமனம் விதிமுறைக்கு முரணானதைக் கண்டித்து

- ☐ நிலுவையுடனான சம்பளப்படி வழங்கப்படாமை.
- ☐ சேவை மூப்பும் கல்வித்தகைமையும் கொண்டோரைப் புறக்கணித்தமை.
- ☐ பல்கலைக்கழக ஊழியர் சிலருக்கு குற்றப்பத்திரம் வழங்கப்படாமல் தண்டனை வழங்கபட்டமை.
- ☐ ஊழியர் இடர் கடன் மீளளிப்புத்தொகை கடன்வழங்கலுக்கு மீளப்பயன்படுத்தாமை. போன்ற கோரிக்கைகளுடன் தமது கோரிக்கைகள் எட்டப்படும் வரை வேலை பகிஸ்கரிப்பு போராட்டம் தொடரும் என்று ஊழியர் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். (27,33)

### கிளி...

நடவடிக்கை மேற்கொண்டது. ஆனால் முகமாலைச் சோதனைச்சாவடியில் உள்ளஇராணுவத்தினர்வன்னிப்பகுதிக்கு அதனைக் கொண்டு செல்லமுடியாது எனக்கூறித் தடுத்துநிறுத்தி அனுப்பியுள்ளனர்.

மேற்படி ஜெனரேட்டர் திருப்பி அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து மின்சார உபகரணங்களான மின்மானியுடனான ஆளிப் பலகைகள் மின்பிறப்பாக்கித் தாங்கி,எரிபொருட்கொள்கலன், டீசல், மின்வழங்குவதற்குத்தேவையான முக்கிய பல உபகரணங்களையும் வன்னிப்பகுதிக்கு எடுத்து வருவதற்கு அரச அனுமதி கிடைத்தும் படையினர் அனுமதிக்கவில்லை.

படையினரின் மேற்படி நடவடிக்கை மக்கள் மத்தியில் பெரும் எரிச்சலையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. (லோ)

### போரிடும்...

நினைவுகூரும் முகமாக வரையப்பட்டிருந்த பொதுப்படத்திற்கும் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித் தார். அதனைத்தொடர்ந்து மருத்துவப் பிரிவுப் போராளி மாவீரன் கப்டன் யாழ்வேளின் திருவுருவப்படத்திற் கான ஈகச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்கள் ஏற்றி வைத்ததோடு மலர்மாலையும் அணிவித்தார். தொடர்ந்து மருத்துவப்பிரிவுப் பெண்போராளிகளின் மாவீரர் வணக்க நடனத்துடன் உள்ளரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இவ்வெளியீட்டு விழாவின் வெளியீட்டு உரையினை விடுதலைப்புலிகளின் வைத்திய கலாநிதி அஜந்தன் அவர்கள் ஆற்றினார். தொடர்ந்து வைத்திய கலாநிதி அஜந்தன் அவர்கள் இறுவெட்டை வெளியிட்டு வைக்க தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டார். அதனைத்தொடர்ந்து இவ்வுருவாக்கத்தில் பங்கெடுத்த அனைத்துக் கலைஞர்களும் தமிழீழ தேசியத்தலைவர் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

'போரிடும் வல்லமை சேர்ப்போம்' இறுவெட்டின் மதிப்பீட்டு உரையினை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் திரு வே.பாலகுமாரன் அவர்கள் நிகழ்த்தினார். இறுதியாக நன்றியுரையினை யாழ்வேள் மருத்துவமனைப் பொறுப்பாளர் சிவா அவர்கள் நிகழ்த்தினார். இந்நிகழ்விற்கு போராளிகள், பொறுப்பாளர்கள், தளபதிகள், வைத்தியர்கள் என பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

உயிர்காக்கும் பணியில் ஈடுபட்டுவரும் மருத்துவப்பிரிவுப் போராளிகள் கடந்தகாலங்களில் விடுதலைப்போராட்டத்தின் சமர்க்களங்களிலெல்லாம் தாம் மனப்பதிவுகளாக்கிய பல விடயங்களும், அவர்களின் உள்ளத்து உணர்வுகளும் இங்கு பாடல் வடிவம் பெற்று உயிரூட்டப்பட்டிருக்கின்றன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இப்பாடல்கள் வரலாற்றுப்பதிவுகளாகவும், மீட்டப்படும் நினைவுகளாகவும் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

### பாராளுமன்றில்...

மூலம் ஆற்றியமை அரசியல் அமைப் பிற்கு முரணான செயலாகும். சமாதான முயற்சிகள் தொடர்பில் அரசியல் அமைப்பை மாற்றி அமைக்க குழுஒன்று நாடாளுமன்றத்தின் மூலம் தெரிவுசெய்யப்படவேண்டும். ஆனால் சனாதிபதி அதனை மறுக்கும் வகையில்தேசிய சமாதானப் பேரவை அமைக்கப்பட்டதாகக் கூறுவது ஏற்றுக்கொள்ள கூடியதல்ல என ஐக்கிய தேசியக்கட்சியினர் கூறியுள்ளனர். அத்துடன் சனாதிபதி முறை ஒழிக்கப்படுவதை நாட்டின் பெரும்பான்மையான மக்கள் விரும்பவில்லை என மேலும் தெரிவித்துள்ளது.

## செய்தியாளர்கள் உடன் தொடர்புகொள்ளவும்

யாழ். குடாநாட்டிலிருந்து ஈழநாதம் வெளிவந்த வேளையில் ஈழநாதம் நாளேட்டின் செய்தியாளர்களாகப் பணிபுரிந்தோரில் தொடர்ந்து பணியாற்ற விரும்புவோர் உடன் கடிதம் மூலமோ, நேரிலோதொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி:-

பிரதமஆசிரியர்,

ஈழநாதம்,யாழ்.சாலை. கிளிநொச்சி.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.